# தொண்டன்

ஆரம்பம் - 1969-பெப்ரவரி



ஓங்கி ஒலித்த குரல் உலக அமைதிக்கு-எம்மை
ஏங்க வைத்தே ஐயோ ஓய்ந்து போனதே!

மார்ச் - ஏப்ரல்-05

15/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

மார்ச் - ஏப்பிரல் 2005

மலர்-37 இதழ்-02

ஆசிரியர்

*J.A.G. இரட்ணகுமார்*

இணை ஆசிரியர்

*மலர்வேந்தன்*

துணை ஆசிரியர்கள்

*மெற்றில்டா இராஜேந்திரம்*

*பெஸ்லீயோ வாஸ்*

வெளியீடு

*சமூகத் தொடர்பு நிலையம்.*

*திரு/ மட். மறை மாவட்டம்*

முகவரி

*சமூகத் தொடர்பு நிலையம்*

*அ.பெ.எண் - 44*

*மட்டக்களப்பு*

SOCIAL COMMUNICATIONS CENTRE

P.O. BOX - 44

BATTICALOA.

TEL: 065 - 2226486

*விலை - 15/=*

*ஆண்டு சந்தா : 250/=*

*ஆறுமாதச் சந்தா : 130/=*

*(தபாற்செலவு உட்பட)*


# உள்ளே


அன்புடன் உங்களோடு... - 01

வெள்ளைப் புறாவொன்று... - 02

கிறீஸ்துவின் உயிர்ப்பு... - 04

தொண்டனின் சில நிமிடங்கள் - 06

கலைஞர் ஜெயராஜா - 08

வீழ்ச்சியிலேதான் மாட்சி - 09

இலக்கிய மஞ்சரி - 11

தேற்றாத்தீவு புனித... - 13

புரியாதன புரிந்தன - 15

மாணவர் பக்கம் - 17

இறப்பு தரும் உயிர்ப்பு - 18

மறை அறிவை... - 20

விவிலியம் கற்போம் - 22

அறிவை வளர்ப்போம் - 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு...

உயிரற்ற யேசுவின் உடலில்
உயிர்ப்பு ஒன்று நடந்தேறியது.
இதுவே நம் அனைவருக்கும்
உயிர்ப்பின் நம்பிக்கையைத் தருகிறது.
உயிர்ப்பும், நிறைவாழ்வும் உண்டு - என
உரைத்த இறைமகன் இயேசுவின்
வார்த்தைகளை
உள்ளத்தின் ஆழத்தில் நம்புகிறோம்.

இந்த உயிர்ப்பினூடாக - வரவிருக்கும்
நிலை வாழ்வை அனுபவிக்க வேண்டுமென்றால்
நம்மில் நம் சமுதாயத்தில்
வெவ்வேறு வடிவங்களில்
உலாவி வரும் - சில
இறப்புக்களிலிருந்து - நாம்
உயிர்ப்படைய வேண்டும்.

தனி மனிதனில்
பொறாமையிலிருந்து பொறுமைக்கும்,
தீமையிலிருந்து நன்மைக்கும்,
காமத்திலிருந்து கற்புக்கும்,
தன்னலத்திலிருந்து பிறர் நலத்திற்கும்,
உயிர்ப்புக்கள் நடைபெறவேண்டும்.

சமூக அமைப்பில்
சாதிப் பாகுபாட்டிலிருந்து
சகோதரத்துவ வாழ்விற்கும்,
வன்செயலிலிருந்து
வளமான வாழ்விற்கும்,
இனவாதத்திலிருந்து
இன ஒற்றுமைக்கும்,
உயிர்ப்புக்கள் நடைபெற வேண்டும்.

அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சிகளிலும் அவ்வப்போது
இறப்பு, உயிர்ப்புக்கள் அரங்கேறுகின்றன.
அண்மையில் ஏற்பட்ட
சுனாமியினால் - பலர்
இறப்பைச் சந்தித்தார்கள்
இறந்தவர்களுக்காக
இறைவனிடம் இறைஞ்சும் பொழுது
நிலை வாழ்வு - அவர்களுக்கு
கிடைக்கும் என்பது - எமது
நம்பிக்கையாகும்.
சுனாமி
உயிர்களையும், உடைமைகளையும்
மட்டும் தாக்கவில்லை - அது
பலரது உள்ளங்களையும்,
மனங்களையும் தாக்கி
உயிர்ப்பைக் கொடுத்துள்ளது.

சாதி, மத, இன வேறுபாட்டால்
பிரிந்திருந்தவர்களை ஒன்றாக்கியது.
துயர் உற்றோரின்
துயர் துடைக்க - பல
உள்ளங்களைத் தூண்டியது.
பாதிக்கப்பட்டவர்களுக்கு
பகிர்ந்தளிக்கும் - நல்மனத்தை
உருவாக்கியது.

இப்படியாக - பல
உயிர்ப்புக்கள் - சம காலத்தில்
நடந்தேறிக் கொண்டிருக்கின்றன.
இவையனைத்தும் - சுனாமி தந்த
உயிர்ப்புக்கள்.

*7ஆம் பக்கம் பார்க்க*



## இறைவாக்கு

**இறந்த கிறீஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார்.**

**அவரே முதலில் உயிருடன் எழுப்பப்பட்டார்.**

1 கொரி. 15/20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைப் புறாவொன்று அமைதி அடைந்தது



திருத்தந்தை இரண்டாம் யோன்போல் அவர்களின் மறைவு கேட்டு வேதனையில் ஆளாதவர் எவரும் இல்லை. இயேசுவின் சீடரான இராயப்பர் அவர்களே கத்தோலிக்க திருச்சபையின் முதலாவது பாப்பரசராவர். அவரின் வரிசையில் 264வது பாப்பரசராக நமது மறைந்த திருத்தந்தை அவர்கள் காணப்படுகின்றார். 263வது பாப்பரசரான முதலாம் யோன்போல் அவர்கள் சுமார் மூன்றுமாதங்களே பாப்பரசராக இருந்தார். அவருக்குப்பின் வந்த 2ம் அருளப்பர் சின்னப்பர் 26 ஆண்டுகாலம் பாப்பரசராக இருந்த பெருமையைப் பெறுகின்றார். இவரின் இயற்பெயர் 'கறோல் வெய்றிறில்லா'.

ஏனைய பாப்பரசர்களைவிட இவர் மிகவும் வேறுபட்டவராகக் காணப்பட்டார். சுமார் நூற்றிமுப்பதுக்கு மேற்பட்ட நாடுகளுக்கு விஜயம் செய்து மக்களுக்கு ஆசீர் அளித்துள்ளார். வழமையாக திருத்தந்தையை மக்கள் நாடிச் செல்வது வழக்கம்: ஆனால் இவர் மக்களை நாடிச் செல்பவராகக் காணப்பட்டார்.

ஒரு பொதுவுடைமைக் கொள்கைக் கோட்பாட்டைக் கொண்ட நாடொன்றில் இருந்து பெறப்பட்ட சொத்து இவர்: நமது பெருமைகளைப் பேசிக்கொண்டு, அதேவேளை சிறுமைகளை மறைத்து வைக்கும் மனித குலத்தில், கத்தோலிக்கத் திருச்சபையின் கடந்தகால பாவங்களுக்காக பாவமன்னிப்பு கேட்டு கத்தோலிக்கத் திருச்சபையின் பெருமையைப் போற்றிக் காப்பாற்றினார்.

1995ம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்தபொது, இலங்கையில் யுத்தம் நடந்து கொண்டிருந்தது. ஆனால் பாப்பரசரின் விஜயத்தை முன்னிட்டு யுத்த நிறுத்தம் சில தினங்கள் அமுல் நடத்தப்பட்டது. அக்கால கட்டத்தில் வடக்கில் இருந்து வருவதற்கு 'கிளாலிப்பாதை' மட்டும்தான். ஒரு மூதாட்டி, அப்பயங்கர கிளாலிப் பாதையூடாக வரும்போது பத்திரிகையாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு 'நான் வாழும் என் கடவுளை பார்க்கப் போகின்றேன்' என்று சொன்னார். கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து ஏனைய சமய மதகுருக்களை சந்தித்த போது, எல்லா மதத் தலைவர்களும் எழுந்து நின்று கைகுலுக்கினார்கள்: ஆனால் பௌத்த பிக்குகள் எவரும் (அவர்களின் முறைப்படி) எழும்பவேயில்லை. எனினும் திருத்தந்தை அவர்கள் புன்முறுவலுடன் குனிந்து அவர்களிடம் கைகுலுக்கிக் கொண்டார். என்னே அரிய பண்பு!

1981ம் ஆண்டு மே 13ம் திகதியன்று சென் .பீட்டர் சதுக்கத்தில் வைத்து 'முகமட் அலி அகா' என்னும் துருக்கியரால் சுடப்பட்டார். எனினும் சிலகாலம் கழித்து அவனை ஜெயிலில் சந்தித்து மன்னிப்புக் கொடுத்தார். இதனைவிட சிறப்பான செயற்பாடு எதுவாக இருக்கும்? சுடப்பட்டபின் எடுக்கப்பட்ட துப்பாக்கிச் சன்னத்தை பாத்திமா அன்னைக்கு காணிக்கையாக ஒப்புக்கொடுத்தார்.

ரஷ்யா மனம் திரும்புவதற்கு இவர் அரும்பாடுபட்டார். அவரின் வழிகாட்டுதலுடன் ஏராளமான கத்தோலிக்கர்களின் செபங்களின் பயனாக ரஷ்யா மனம் திரும்பியது. திருத்தந்தை அவர்கள் 2005ம் ஆண்டை 'நற்கருணை' ஆண்டாகப் பிரகடனம் செய்தார்.

இவர் ஓர் ஆன்மீகத் தலைவராக இருந்தாலும் வத்திக்கானின் தலைவராகவும் இருந்தார். ஒவ்வொரு பாப்பரசரும் பதவிவழியாக வத்திக்கானின் தலைவராக இருப்பர். எனவே, பாப்பரசர்கள் வெளிநாடுகளுக்கு விஜயம் செய்யும்போது நாட்டுத்தலைவர்களுக்கான இராஜாங்க மரியாதைகள் செய்யப்படுவதுண்டு. இது கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர்களுக்கான சிறப்பாகும்.

'அரசியல் விஞ்ஞானம்' பாடத்துறையில் 'ஆட்சியல்' பகுதியில் அதிகாரபடிநிலையமைப்பில் உலகின் முதலாவதும், சிறந்ததுமான படிநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமைப்பாக கத்தோலிக்க திருச்சபையே உதாரணமாக எடுத்துக்காட்டப்படுகின்றது. எனவே திருத்தந்தை அவர்கள் சிறந்த நிர்வாகத் தலைவராகவும் எடுத்துக் காட்டப்படுகின்றார்.

பத்திரிகைகள் குறிப்பிடுவதுபோல் அடுத்த பாப்பரசர் இன்னார்தான் என வெளியிடப்படும் ஊகங்கள் எப்பொழுதும் உண்மையாவதில்லை. அது இறைவனின் சித்தம்: இறைதெரிவு.

வெள்ளைப் புறாவொன்று அமைதி அடைந்துவிட்டது: மோட்சத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கை ஒன்றினால் அதிகரித்து விட்டது. அவரின் பிரார்த்தனை எங்களுக்காக எப்பொழுதும் உண்டு என நம்புவோமாக!

**- R.B.V -**

---

# உலக சமாதானக் குரல் ஓய்ந்தது!!

## கத்தோலிக்க திருச்சபையின் தனிப்பெருந்தலைவர் இறையடி சேர்ந்தார்

நூறு கோடிக் கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத் தலைவரும் உலகத் தலைவர்களில் ஒருவருமான திருத்தந்தை 2ம் யோவான் பவுல் ஏப்ரல் மாதம் 3ம் திகதி அதிகாலை இவ்வுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

கடந்த சில ஆண்டுகளாகவே நோய்ப்பட்டிருந்த அவர் அவ்வப்போது மருத்துவ சிகிச்சைகளுக்குட்பட்டு வந்திருந்தார். கடந்த சில வாரங்களாக கடும் சுகவீனமுற்ற திருத்தந்தை மருத்துவ சிகிச்சைகள் பயனளிக்காத நிலையில் மரணமானார்.

எண்பத்தினான்கு வயதான திருத்தந்தை முன்னாள் கம்யூனிச நாடாகவிருந்த போலந்து நாட்டில் 1920ம் ஆண்டு மே மாதம் 18ம் திகதி பிறந்தார். இவருடைய இயற்பெயர் 'கரோல் வொய்த்தீவா' என்பதாகும்.

இளவயதிலேயே தாய் தந்தையை இழந்த இவர் போரின் கொடுமைகளை அனுபவித்தவர். நிலக்கரிச் சுரங்கத்தில் தொழிலாளியாக வேலை செய்தவர். கடினமான வாழ்க்கைச் சூழலை அனுபவித்து வந்த அவர் அதற்கு மத்தியிலும் குருத்துவக் கல்வி பயின்று 1946ம் ஆண்டு குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார்.

உயர்கல்விப் புலமையும், பணி ஆர்வமும், துணிச்சலும் மிக்க வரான கரோல் வொய்த்தீவா கம்யூனிச அரசின் கெடுபிடிகளுக்கும், பழிவாங்கல்களுக்கும் மத்தியில் உறுதியோடு சேவை ஆற்றினார். 1958ல் ஆயராகவும், 1963ல் பேராயராகவும், 1967ல் கருதினாலாகவும் உயர்ந்த அவர் எவரும் எதிர்பாராத விதமாக தமது 58வது வயதில் அதாவது 1978ம் ஆண்டு கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமை ஆயராக, தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் திருத்தந்தையாகத் தெரிவு செய்யப் பட்ட



போது அதற்கு முந்திய 132 வருடங்களில் தெரிவு செய்யப்பட்ட திருத்தந்தையரில் வயதில் இளையவராக விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் ஒரு சிறந்த எழுத்தாளர், பல நூல்களை எழுதியுள்ளார். பல் துறைகளில் புலமை மிக்கவர். இவருடைய நூல்கள் விற்பனையில் உலக சாதனைகள் படைத்துள்ளன. 'நம்பிக்கையின் நுழைவாயிலைக்

5ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிறிஸ்துவின் உயிர்ப்பு நம்பிக்கை நிறைந்த நற்செய்தி

**-நமது ஆயரின் உயிர்ப்பு விழாச் செய்தி-**

அன்பான சகோதர சகோதரிகளே! ஆண்டவர் இயேசு மரணத்தை வென்று மாட்சியோடு உயிர்த்தெழுந்த இந்நாளிலே அனைவருக்கும் மகிழ்ச்சி நிறைந்த உயிர்ப்பு விழா வாழ்த்துக்களையும் ஆசீரையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மரணமில்லாப் பெரு வாழ்வு என்பது மானுடத்தின் நீண்ட காலக் கனவு. இந்தக் கனவு இயேசுவின் உயிர்ப்பிலே நனவானது.

"இறந்த கிறீஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார்..." இது அனைவரும் உயிருடன் எழுப்பப் படுவர் என்பதை உறுதிப் படுத்துகிறது. (1கொரி.15/20)

மரணம் , அழிவு, துன்பம் என்பவை கிறீஸ்தவ நோக்கில் பாவத்தின் விளைவுகள். அவைகளை வெற்றி கொள்வதே உயிர்ப்பு. அப்படிப் பார்க்கின்றபோது உயிர்ப்பு என்பது ஒரு கல்லறை நிகழ்வு மட்டுமன்று, பாவத்தின் தீய சக்திகளுக்கெதிராக கிறீஸ்து நடத்திய போராட்டத்தின் முழுமையான இறுதி வெற்றியாகும்.

கிறீஸ்து தமது வாழ்வில் சந்தித்த சோதனைகள், துன்பங்கள், சவால்கள், அவமானங்கள், பாடுகள் அனைத்தையும் எதிர்கொண்டு நாளும் அவர் அடைந்த உயிர்ப்பின் முழுமை நிலையையே மரணத்தின் பின்னரான அவரது உயிர்ப்பு, நமக்கு உணர்த்தி நிற்கிறது.

எனவே கிறீஸ்துவின் உயிர்ப்பு மானுட வாழ்வின் இயங்கியல் தத்துவமாகும். உயிர்ப்பை ஒரு நாள் நிகழ்வாக, ஒரு நாள் விழாவாகப் பார்க்கும் மனநிலையிலிருந்து மாறி, நமது நாளாந்த வாழ்வில் உயிர்ப்பு அனுபவத்தைப் பெறுவதே கிறீஸ்துவின் உயிர்ப்புப் பற்றிய சரியான புரிதலாகும்.

நாம் பாவத்துக்கு இறந்து புண்ணியத்தில் உயிர்க்க வேண்டும் என்று புனித பவுல் அடிகள் கூறுவது இதனைத்தான்.

இன்றைய வாழ்க்கை முறை, நாம் சந்திக்கின்ற அனுபவங்கள், சவால் மிக்கதாக உள்ளன.

வறுமை, வன்முறைகள், போர்ச்சூழல், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், ஆடம்பர வாழ்வைக் குறியாகக் கொண்ட நுகர்வுக் கலாசாரம், இன, மதக் கலவரங்கள் இவைகளுக்கிடையே அண்மையில் தென்னாசியாவில் இலட்சக் கணக்கான மக்களைப் பலி கொண்டு அனைத்து வளங்களையும் அடித்து நொருக்கியுள்ள கடல் பேரழிவு, இதன் காரணமாக எதிர்காலம் பற்றிய அச்சத்திலிருந்து இன்னும் முழுமையாக விடுபட முடியாத ஒரு மன இறுக்கம் போன்றவை மக்களை ஆக்கிரமித்துள்ளன.

இத்தகைய ஒரு சூழ் நிலையில், நம்பிக்கை நிறைந்த நற்செய்தியாக கிறீஸ்துவின் உயிர்ப்பு நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது.

"கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய உயிர் பெறாது" என்னும் கிறீஸ்துவின் வார்த்தைகள் நமது துன்பங்களுக்கு வெளிச்சம் தருகின்றன. துன்பங்களை எதிர்கொள்வதும், அவற்றினூடாக நாம் மாற்றம் பெற்று புத்துயிர் அடைவதும் தவிர்க்க முடியாத வாழ்க்கை நிகழ்வுகளாகும். இந்த வாழ்வின் இயக்கத்தை நாம் கடவுளுக்குள் வாழ்வதன் மூலம், ஓர் உயிர்ப்பு அனுபவமாக மாற்ற முடியும். இத்தகைய ஒரு சவாலை எதிர்கொள்ள உயிர்ப்பு விழா நமக்கு அழைப்பு விடுக்கிறது.

இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்த அளவில் இன்றைய சூழ்நிலை மிகவும் முக்கியமானது. தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களே சுனாமிப் பேரலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களால் பெரும் சேதத்துக்குள்ளானவை. அதேவேளை நீதியான, நிரந்தரமான சமாதானம் ஒன்றை எதிர்பார்த்து ஆரம்பிக்கப்பட்ட சமாதானப் பேச்சு வார்த்தைகள் தடைப்பட்டுள்ளதோடு, அதிகரித்து வரும் வன்முறைகளும், படுகொலைகளும், பழிவாங்கல்களும் பெரும் அச்சத்தையும் ஏமாற்றத்தையும் தருவனவாக உள்ளன. மீண்டும் ஒரு அகதி முகாம் வாழ்க்கைக்கு, கையேந்தும் சூழ்நிலைக்கு எமது மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். ஓர் உயிர்ப்பை அவாவி நிற்கின்றனர்.

நிலையான சமாதானம், நிம்மதியான வாழ்வு என்பது, அன்பிலும், தியாகத்திலும், மன்னிப்பிலும், பகிர்வதிலும் மட்டுமே உருவாக முடியும் என்று இயேசுவின் உயிர்ப்பு அடித்துச் சொல்கிறது. இயேசுவின் உயிர்ப்பு கல்வாரியிலே தம்மையே பலியாக்கிய தியாகத்தில் மலர்ந்தது. எப்படி இயேசுவின் மரணமும் உயிர்ப்பும், பரமதந்தையின் திட்டத்தில் இடம்பெற்றிருந்தனவோ, அப்படியே நமது வாழ்வின் இன்ப துன்ப நிகழ்வுகளும், இறைவனின் திட்டப்படியே நடந்தேறுகின்றன.

நமது அன்றாட வாழ்விலே அந்த உயிர்ப்பு அனுபவங்களைச் சுவைத்தால், நமது சிந்தனையும் வாழ்வும் ஒரு பாஸ்காவாக மாறினால் நம்மை அழுத்தும் சுயநலன்களைக் கடந்தால் இயேசுவின் உயிர்ப்பிலே நாமும் பங்கு கொள்ளலாம். அவரது உயிர்ப்பு தரும் சமாதானம் நம்மிடத்தே தங்கும்.

உயிர்த்த ஆண்டவர் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!

---

*3 ஆம் பக்கம் தொடர்ச்சி*

கடத்தல்' என்ற இவரது நூல் 39 நாடுகளில் 21 மொழிகளில் வெளிவந்தது. அமெரிக்காவில் மட்டும் 18 இலட்சம் பிரதிகள் விற்பனையாகின. மொத்த விற்பனை இரண்டு கோடியை எட்டியது. இதனைவிட கவிதைகள், கட்டுரைகள் எனவும் ஏராளமான படைப்புக்களை திருத் தந்தை படைத்துள்ளார். அத்துடன் இவர் ஒரு நாடக எழுத்தாளர், நடிகர், சிறந்த பேச்சாளர். பல்கலைக் கழகப் பேராசிரியர். பதினொரு மொழிகளில் புலமையும் இன்னும் பல்வேறு மொழிகளில் போதிய அறிவும் பெற்ற பன்மொழிப் புலவர். இவ்வாறு பன்முக ஆளுமை மிக்கவராக விளங்கிய திருத்தந்தை ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள் பால் மிகுந்த அன்பும் பரிவும் கொண்டவர். உலகில் எங்கு அநீதி நிகழ்ந்தாலும் அதற்கு எதிராக வலிமையாக ஒலித்த குரல் திருத்தந்தையினுடையது. உலக சமாதானத் துக்கும், இனமத இணக்கப்பாட்டிற் கும் திருத்தந்தை ஆற்றிய பணிகள் அளப்பரியன. இதன் காரணமாக அனைத்து மக்கள் மத்தியிலும் அவர் செல்வாக்குப் பெற்றிருந்தார்.


அனைத்து மக்களுக்கும் நல்ல ஆயராக விளங்கிய அவர் தமது மக்களைச் சந்திக்க ஏறக்குறைய 126 திருப்பயணங்களை மேற்கொண்டு பயணம் செய்யும் பாப்பரசர் என்ற சிறப்பினைப் பெற்றார்.

உலக மக்களின் நம்பிக்கைக்குரிய தலைவராக, வழிகாட்டியாக, கத்தோலிக்க விசுவாசத்தின் காவலனாக சமாதானத் தூதராக வாழ்ந்த திருத்தந்தையின் மறைவு அனைத்துலக சமுதாயத்திற்கும் ஈடு செய்ய முடியாத பெரும் இழப்பாகும்.

-மலர்வேந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மிகவும் அண்மைக்காலமாக மக்கள் மத்தியில் இன்னுமொரு பீதி. சுநாமிப் பீதி மெல்ல மெல்ல அடங்கி வரும்போல் தோன்றும் போது, உலகம் இருண்டு விடும்: வீட்டுக்குள் இருக்க வேண்டும்: ஆசீர்வதிக்கப் பட்ட மெழுகுவர்த்தியை மட்டும் தான் எரியவிடவேண்டும் என்றவாறான செய்திகள் மக்களைக் கலங்கடித்துக்கொண் டிருக்கின்றன. அதுவும் தேவ தாயாரின் மூன்றாம் இரகசியம் என்றுதான்! இவ்வாறான செய்திகள் துண்டுப் பிரசுரங்களாகவும், 'போட்டோ கொப்பி' பிரதிகளாகவும் பரப்பப்பட்டுக் கொண்டிருக் கின்றன.

மெழுகுவர்த்தி விற்பனை நிலையங்களில் திடீரென விற்பனை அதிகரித்துக் காணப் படுகின்றது. மக்கள் என்ன, எது என்று தெரியாமல் பதறிக்கொண்டிருக்கின்றார்கள். எனவே இவற்றிற் கான விளக்கம் என்ன, மக்களின் அச்சம் நியாய மானதுதானா, கத்தோலிக்கத் திருச்சபை இது தொடர்பாகக் கொண்டிருக்கும் நிலைப்பாடு என்ன என்ற வினாக்களுக்கான விடைகளை அறிந்து கொள்வதற்காக, தாண்டவன்வெளி புனித வியாகுல அன்னை தலத்திருச்சபையின் பங்குத்தந்தை அருட்பணி. பொன்னையா ஜோசப் அடிகளார் அவர்களை 'தொண்டனின் சில நிமிடங்கள்' பகுதிக்காகச் சந்தித்தோம்.

அருட்பணி. பொ. ஜோசப் அடிகளார் அவர்கள் தனது குருத்துவப்பட்டத்துடன் பேராதனைப் பல்கலைக்கழக இளங்கலைமானிப் பட்டத்தையும் பெற்றவர். விவிலிய இறையியலில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற இவர் பொருளியல், அரசியல், தமிழ் ஆகிய பாடங்களில் புலமை மிக்கவர் என்பதை நம்மிற் பலர் அறிய வாய்ப்பில்லை. தனது முதுமானிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்ட இவர், தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தைப் பெறும் இறுதிக்கட்டத்தில் உள்ளார்.

இவரிடம் நாம் பெற்றுக்கொண்ட தெரிவுகளைத் தொகுப்பாகத் தருகின்றோம்.

முதலாம் உலக மகாயுத்தம் நடை பெற்றபோது சுமார் எண்பது இலட்சம்பேர் மாண்டு போயினர். யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை 1917ம் ஆண்டு மே மாதம் 13ம் திகதி, போர்த்துக்கல் நாட்டின் பற்றிமா என்னும் இடத்தில் தேவதாயார் மூன்று சிறுசுகளுக்குக் காட்சி யளித்தார். லூசியா என்ற சிறுமியுடன், அவளது ஒன்றுவிட்ட சகோதரியான யசிந்தா, சகோதரனான பிரான்சிஸ்கோ ஆகியோருக்கே இவ்வரப்பிரசாதம் கிடைத்தது.

லூசியாவிடம் அன்னை மூன்று இரகசியங் களை வெளியிட்டார். இன்னொரு உலகயுத்தம் ஏற்படும், ரஷ்யா மனம் திரும்பும் என்றவாறான விடயங்களாகவே முதலிரண்டு இரகசியங்களும் காணப்பட்டன. மூன்றாவது இரகசியம் உடனடியாக வெளிப்படுத்தப்படவில்லை.

இதற்கிடையில் 1919ம் ஆண்டு ஏப்ரில் 4ம் திகதி பிரான்சிஸ்கோ காலமானார். 1920ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ம் திகதி யசிந்தா காலமானார். (2005ம் ஆண்டு பெப்ரவரியில் தனது 97ம் அகவை யில் லூசியா காலமானார், ஒரு கன்னியாஸ் திரியாக.)

முதலிரண்டு தேவ இரகசியங்களும் நிறைவேறிவிட்டன என்றுதான் சொல்லவேண்டும். இரண்டாம் உலகயுத்தம் நடைபெற்றுவிட்டது. கடும் சோஷலிச போக்கினைக் கொண்டிருந்த ரஷ்யாவும் மனந்திரும்பிவிட்டதுடன் துண்டு துண்டாகவும் ஆகிவிட்டது.

மூன்றாவது இரகசியம் 1960ம் ஆண்டுக்குப் பின்னரே பகிரங்கப்படுத்தப்படவேண்டும் என்று தேவதாயாரால் கூறப்பட்டு இருந்தது.

பரிசுத்த பாப்பரசர் 12ம் பத்திநாதர் அவர்களிடம் 1944ல் எழுத்து மூலமாக இவ் விரகசியம், லூசியாவால் தெரியப்படுத்தப்பட்டது. தொடர்ந்து வந்த 23ம் அருளப்பர் பாப்புவிடமும் இச்செய்தி தெரியப்படுத்தப்பட்டது. 1960 ஆண்டு அவர் பாப்பரசராக இருந்தபோதும் அவ்விரகசியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தப்படவில்லை. தொடர்ந்து 6ம் சின்னப்பர், 1ம் அருளப்பர் சின்னப்பர் (சுமார் 3 மாதங்களே பாப்பரசராக இருந்தார், 2ம் அருளப்பர் சின்னப்பர் ஆகியோர் பாப்பரசர்களாக இருந்தனர்.

இதில் அண்மையில் காலமான 2ம் அருளப்பர் சின்னப்பர் 1981ம் ஆண்டு மே மாதம் 13ம் திகதி சுடப்பட்டார். (பீாதா பற்றிமாவில் காட்சியளித்ததும் மே 13 அன்றுதான்) இதன் பின்னர்தான் 3வது இரகசியம் மெல்ல மெல்ல கசியவிடப்பட்டது. அதாவது வெள்ளையாடையணிந்த உலகத் தலைவர் மலையேறும்போது கொல்லப்படுவார் (அல்லது முயற்சிக்கப்படுவார்) என்ற செய்தியே அது.

இச்செய்தி தனக்கு மிகவும் பொருத்தமானது என 2ம் அருளப்பர் சின்னப்பர் கருதிவிட்டார் போலும். எனவே தனது உயிரை காப்பாற்றியதற்காக, முதன்முறையாக 1982ல் போர்த்துக்கல் சென்றார். அங்கு தனது உடலில் இருந்து எடுக்கப்பட்ட சன்னத்தை தேவதாயாரின் முடியில் காணிக்கையாக அர்ப்பணித்தார். தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் போர்த்துக்கல் சென்று பற்றிமா அன்னையைத் தரிசித்தார்.

2000ம் யூபிலி ஆண்டில் பிரான்சிஸ்கோ, யசிந்தா ஆகியோருக்கு 'முத்திப்பேறு' பட்டம் அளித்தார்.

எனவே மக்கள், மூன்றாம் இரகசியம் பற்றி பயப்படத்தேவையில்லை:துண்டுப் பிரசுரங்களைக் கண்டு அலட்டிக்கொள்ளத் தேவையில்லை: பிரதிகள் எடுத்து விநியோகம் செய்யத்தேவையும் இல்லை.

இதில் வேடிக்கை என்னவென்றால் 1993ல் வெளியிடப்பட்ட பிரசுரம் ஒன்றில் 1950க்கும் 2000க்கும் இடைப்பட்ட காலத்தில் பூமியில் அழிவுகள் வரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இப்போது கிடைக்கும் துண்டுப் பிரசுரம் 1950 - 2005 எனக் கூறுகின்றது. எனவே கவலைப்பட வேண்டாம்.

பற்றிமாவில் தேவதாயார் கூறியது போன்று மாசற்ற திரு இருதயத்துக்கு ஒப்புக்கொடுத்து தினமும் செபமாலை சொல்லுங்கள்.

இயற்கை அனர்த்தங்கள் தானாகவே வந்தன: வருகின்றன: வரும். இவை தவிர்க்க முடியாதவை. இறைபக்தியில் வாழுங்கள். கத்தோலிக்கர் அல்லாத ஏனையோரைப் பொறுத்த வரையில் தங்கள், தங்கள் மனச்சாட்சிப்படி வாழ்ந்தாலே போதும்.


உலகம் தொடர்ந்து இருட்டாக இருக்கும்: நச்சுப்புகை வரும், கதவைத்திறக்க வேண்டாம் என்றெல்லாம் மூன்றாம் இரகசியத்தில் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்படவில்லை. ஆகவே பயப்படவே வேண்டாம்.

---

*1ம் பக்க தொடர்ச்சி...*

சுனாமியின் மறுபக்கத்தில் - சில
இருண்ட இறப்பு நிகழ்ச்சிகளும்
நடந்தேறுகின்றனவாம்
அடிமட்டத்தில் அடிபட்டவனுக்கு
அனைத்து உதவிகளும் சென்றடைய வில்லையாம்
இடையிலிருக்கும் ஒரு சிலர்
சுருட்டிக்கொள்கிறார்களாம்
தெற்கில் ஒரு கண்ணோட்டத்திலும்,
வடக்கு கிழக்கில் ஒரு கண்ணோட்டத்திலும்
நிவாரணப் பணிகள் நடந்தேறுகிறதாம்
பாதிக்கப்படாத பலர் - சுனாமியின்
ஆசீர்வாதத்துடன் வாழ்கிறார்களாம்.

இவைகள் உண்மையானால்
நெஞ்சங்கள் மரத்துப்போய்
இறந்து போகின்றன என்பதுதானே அர்த்தம்



இவை அனைத்திலுமிருந்து
மனிதன் - சமுதாயம் உயிர்ப்படைய வேண்டும்.
உயிர்ப்படைய வேண்டுமென்றால்
இறைமகன் இயேசு
நிலைவாழ்விற்கெனக் கொடுத்த
இறைவார்த்தையில் மட்டும்
ஒவ்வொரு மனிதனும், சமுதாயமும்
தம் வாழ்வை - புதியதாய்க் கட்டி
புதிய வானம், புதிய பூமி - என்ற
இறையரசைக் கட்டியெழுப்ப வேண்டும்.

**"உயிர்த்த இயேசுவின் நல்லாசிகளோடு,**
***Easter* நல்வாழ்த்துக்களையும்**
**தெரிவித்துக் கொள்கிறேன்"**

**—ஆசிரியர்—**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர் ஜெயராஜா



கலைஞர் ஜெயராஜா
மறைந்தனர் 21-02-2005
செய்தியைத் தொண்டன் மாசி இதழ் தந்தது
உள்ளங்களைத் தொடும் வகையிலும்
ஒரு மட்டக்களப்புக் கலைஞரை
உள்ளத்தாலும் உணர்ச்சியாலும்
கட்டுரையில் வார்த்து
மனங்களில் நிலைத்து வைக்க
முனைகிறார்
கலைஞர் தொண்டன் ஆசிரியர்
மலர்வேந்தன்.

அவரின் வார்ப்புக்கு அணியாக
என் இதயக் கனிகளை
வாசகர் விருந்திற்கு....
அருட்சகோதரர் சூசைதாசனின் துறவற வெள்ளிவிழா
நாட்டிய நாடகம் ஒன்று
அதற்குக் கரு தருகிறார் அமரர்
நாடகக் கலைஞர் அருட்பணி ஒக்கஸ் அடிகளார்
விவிலியத் தாவீது அரசனின் பெரு வரலாற்றில்
ஒரு களங்கம்
எனினும் தம் தூதுவனின் மூலமாக இறைவன் தாவீதுக்கு
உணர்த்துகிறான்

மன்னன் மனமாற்றம் அடைந்து விட்டான்
மன்னிப்புக் கோருகிறான்
இந்த வரலாற்று நிகழ்வை
மாமன்னன் வரலாற்றை
மாமனிதன் மனமாற்றம்
இது நான் கொடுத்த தலைப்பு
மூன்று மணித்தியாலங்கள் கொண்ட
நாட்டிய நாடகத்தை
தம் கற்பனை வளத்தால்
கலைஞானத்தால்
அறிவு ஆற்றலால்
நாட்டிய நாடகமாகப் படைக்கிறார்
ஜெயராஜா
இந் நாடகத்தை
யான் நெறிப்படுத்திய வேளையில்
சுமார் மூன்று மாதங்களாக என்னோடு உடன் இருந்து
நூற்றுக்கு அதிகமான நாட்டிய கலைஞர்களுக்கும்
அண்ணாவியாருக்கும் ஆலோசனை அளிக்கிறார்
ஜெயராஜா இருக்கிறார், மட்டக்களப்பு தாண்டவன்வெளி
பேடினன்ஸ் மண்டபத்தில் நாட்டியம் அரங்கேறியது.

மீண்டும் மறைமாவட்ட நூற்றாண்டுப் பெருவிழாவில்
வெபர் அரங்கில் சிறப்பு நிகழ்வாக மாமன்னன் மனமாற்றம்
அரங்கேறுகிறது

பல ஆயர்கள் நூற்றுக்கணக்கான துறவிகள்
பெருந் திரளான மக்கள் கண்டு களித்தனர்
நாட்டியம் புகழ் பெற்றது.

ரூபவாஹினியூடாக எங்கும் சென்றது
பின்னணிக் கலைஞர்களில் ஜெயராஜாவும்
ஒருவர் அல்லர், மிக முக்கியமானவர்
என்றும் வாழ்க அமரர்
ஜெயராஜா

ஒரு பெருங் கலைஞரை அதிகம்
பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே ஆனால் அவருக்கு
எழுதி வைத்தவைகள் அவ்வளவுதான்
இன்னும் உழைத்திருப்பார்
பொருளாதார நெருக்கடி
இத்தனைக்கும் மேலாக
அவர் ஆற்றிய கலைச் சேவைகள்
மதிப்பிட வேண்டியவைகள்
மதிப்பளிக்க வேண்டியவைகள்

அருட். திரு. S.A.I மத்தியு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீழ்ச்சியிலேதான் மாட்சி

ஒரு பழத்தின் சாறு நமக்குக் கிடைக்க வேண்டு மென்றால் அந்தப்பழத்தை வெட்டி அதைக் கசக்கிப் பிழியப்பட வேண்டும்.

திருச்சபையின் தொடக்க காலத்தில் வாழ்ந்து மறை சாட்சியாக இறந்த புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார், "நான் இயேசுக் கிறிஸ்துவின் கோதுமைமணி, சிங்கங்களின் பற்களுக்கிடையில் அரைக்கப் பட்டு மாவாகி, அப்பமாகி இயேசுவின் உடலாக மாறுவேனாக" என்று கூறி வேதசாட்சியாக மரணமடைந்தார். அதனால் வேத சாட்சிகளின் இரத்தம் பூமியில் விழுந்து புதுக்கிறிஸ்தவர்களை முளைப்பிக்கச் செய்தது.

**மாட்சி பெற வேண்டிய நேரம்:**

எருசலேமில் பாஸ்கா விழா நடைபெற்றபோது தேவாலயத்தில் ஒரு நிகழ்ச்சி இடம் பெற்றதாக நாம் அறிய வருகின்றோம். பெரும்பாலான யூதர்கள் இயேசு வின் மீது நம்பிக்கை இழந்து விட்டனர் (யோவான் 12:19). இச் சூழ்நிலையில் ஒரு சில கிரேக்கர்கள் பிலிப்புவிடம் வந்து "ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம்" என்றனர்.

இதுவரை எனது நேரம் வரவில்லை என்று இயேசு கூறினார். கானாவில் தம் தாயிடம், எனது நேரம் இன்னும் வரவில்லை' (யோவான் 2:4) என்றார். கூடாரத்திரு விழா வின் போது "எனக்கு ஏற்ற நேரம் இன்னும் வரவில்லை" (யோவான் 7:6) என்றார். ஆனால் கிரேக்கர்கள் அவரைக் காண விரும்பியபோது, "மானிட மகன் மாட்சி பெற வேண்டிய நேரம் வந்துவிட்டது" (யோவான் 12:23) என்று இயேசு கூறுகிறார்.

'எனது நேரம்' என்பது இருபொருளைக் குறித்துக் காட்டுகிறது. முதலில் இயேசுவின் 'சிலுவை மரணத்தின் நேரமாகும். இரண்டாவது இயேசு 'மாட்சிமை பெறவேண்டிய நேரமாகும். அதாவது அவரது உயிர்பின் நேரமாகும். இயேசு இதனை நன்கு உணர்ந்துதான் தனது நேரம் வந்துவிட்டது என்று கூறுகிறார்.

**மரணத்தின் வழியாக மாட்சிமை:**

யோவான் தனது நற் செய்தியில் இயேசுவுக்கு அலகையினால் தொடக்கத்தில் வந்த சோதனைகளைப் பற்றிக் குறிப்பிடவில்லை. மேலும் மற்ற ஒத்தமை நற்செய்திகளில் வருணிக்கப்படும் கெத்சமனித் தோட்டத்தில் இயேசு அனுபவித்த வேதனைகளை யோவான் குறிப்பிடவில்லை. ஆனால் (யோவான் 12:27) இயேசுவின் வேதனையை வருணிக்கிறார். பெரியவியாழனன்று கெத் சமனித் தோட்டத்தில் இயேசு வேதனையுற்றதாக மற்ற நற் செய்தியாளர்கள் குறிப்பிடு கின்றனர். ஆனால் யோவான் குருத்து ஞாயிறன்று மக்கள் பலர் கூடியிருக்கையில் ஆலயத்தில் வேதனையுற்றார். "இப்பொழுது என் உள்ளம் கலக்க முற்று ள்ளது" என்று கூறினார்.

கோதுமை மணியைப் போல தானும் மண்ணில் மடிந்தால்தான் உயிர்த் தெழுந்து அனைவருக்கும் புதுவாழ்வு வழங்க முடியும் என்பதை இயேசு நன்கு அறிந்தி ருந்தார். இதுவே அவரது மெசியாத் தன்மையின் சிறப்பு என்று உணர்ந்து தன்னை முழுவதும் இறைசித்தத்திற்குக் கையளிக்கிறார்.

**மாட்சிப்படுத்தும் தந்தை:**

'தந்தையே உம் பெயரை மாட்சிப்படுத்தும்' (யோவான் 12:28) என்று மன்றாடுவதின் பொருள் என்னவென்றால் 'உமது சித்தப்படி நான் சிலுவையில் அறையுண்டு மரணமடைய முழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்புடன் வருகிறேன். இவ்வாறு உமது பெயரை நான் மாட்சிப்படுத்துவேன்' என்பதாகும்.

இதோ இயேசுவின் வாழ்க்கை இலக்கும், அவர் தெரிந்து கொண்ட இலட்சியப் பாதையும் இறைத்தந்தையின் திட்டத்திற்கு ஏற்ப அமைந்திருப்பதைக் கண்டு கடவுள் ஒப்புதலின் அடையாளமாகக் குரல் கொடுக்கிறார். இறைவன் மனித வரலாற்றில் பலமுறை குரல் கொடுத்துள்ளார். உண்மையான முழு விடுதலைக்கு நீதித் தலைவர்கள், அரசர்கள், இறைவாக்கினர்கள் வாயிலாகக் கடவுள் குரல் கொடுத்தார். இயேசுவின் வழியாகக் குரல் கொடுத்தார். அந்த இயேசுவை மனிதர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கடவுளே நேரடியாகக் குரல் கொடுக்கிறார். இயேசு திருமுழுக்குப் பெற்ற போதும், மலையில் (தாபோர்) தோற்றம் மாறியபோதும் தந்தையின் குரலைக் கேட்டோம். இப்பொழுது "மாட்சிப் படுத்தினேன்: மீண்டும் மாட்சிப்படுத்துவேன்" என்று தந்தை கூறுகிறார். தம் வாழ்வை, பணியிலும் தியாகத்திலும், பிறர்நலச் சேவையிலும், அணு அணுவாய் கரைத்துக் கொள்கிறவர், நிறைவாழ்வை நிலையாய் சொந்தமாக்கிக் கொள்வார். அதற்கு மாறாகச் சிற்றின்பத்திலும் சுய இன்பத்திலும் வாழ்நாளைக் கடத்தித் தனக்காக வாழ்பவர், நிலை வாழ்வை இழந்துவிடுவர்' என்பது தெளிவு. எனவே, இயேசுவைப்போல் மரணமடைந்தால், மாட்சிமையில் நாமும் வாழ்வோம். இதுவே, இயேசு தம் சீடர் ஒவ்வொருவருக்கும் தரும் சவால்

## பயணம் செய்த திருத்தந்தை

1978ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ம் திகதி தமது ஆட்சிக் காலத்தை ஆரம்பித்த திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் இதுவரை மொத்தமாக 1247613 கி.மீ. தூரம் பயணம் செய்துள்ளார். 129 நாடுகளுக்கு விஜயம் செய்துள்ள திருத்தந்தை இத்தாலியில் 146 பயணங்களையும், இத்தாலிக்கு வெளியே 104 பயணங்களையும், உரோமிலுள்ள திருச்சபை வட்டாரங்களுக்கு 301 தடவையும் விஜயம் செய்துள்ளார். வத்திக்கானுக்கு வெளியே மேற்கொண்ட பயணங்களில் 822 நாட்களை செலவிட்டுள்ளார்.



## அச்சத்தை ஏற்படுத்திய திருத்தந்தையின் தெரிவு

திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் போலந்து நாட்டைச் சேர்ந்தவர். அவர் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது அங்கு கம்யூனிஸ்ட் ஆட்சி நிலவியது. திருத்தந்தையாகத் தமது நாட்டவர் தெரிவு செய்யப்பட்டது அவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது! அச்சமயத்தில் கம்யூனிச நாடுகளுக்குத் தலைமை தாங்கிய ரஷ்யாவின் பொலிட் பீரோவில் 'நமக்கு அடுத்த தொல்லை காத்திருக்கிறது' என்று எச்சரிக்கப்பட்டதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

ஆழியோன்

## மண்ணில் தொலைந்த மனது தேடி.....

தேசிய கலை இலக்கியப் பேரவையின் (இலங்கை) 105 ஆவது வெளியீடாக 'மண்ணில் தொலைந்த மனது தேடி....' என்னும் கவிதைத் தொகுப்பு நூல் வெளிவந்துள்ளது. இக்கவிதைகளை யாத்தவர் சடாகோபன். இவர் இலங்கைச் சுங்கத் திணைக்களத்தில் உதவி அத்தியட்சகராய்ப் பணிபுரிகின்றார்.

இவரது கவிதைத்தொகுப்பு, அத் திணைக் களத்தில் பணிபுரியும் எனது சகோதரரிடம் காணப்பட்டது. அத்தொகுப்பின் அட்டைப்பட அமைப்பும், புத்தகத்தின் பௌதிக அமைப்பும், அதனை எடுத்து வாசிக்க வேண்டும் என்ற ஆவலை ஏற்படுத்தின. (நூல் ஒன்றின் துரித விற்பனைக்கு அல்லது வாசகர்களிடம் சென்றவடைவதற்கு அதன் புறவமைப்பும் பெரிதும் உதவுமல்லவா...?)

2004ம் ஆண்டு டிசம்பர் மாதம் இப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. (சுனாமி மாதம்) சடாகோபனின் கவிதைகள் என்ற தலைப்பில் பேராசிரியர். சி. சிவசேகரம் அவர்களும், முன்னீட்டை கவிஞர் சோ. பத்மநாதன் அவர்களும் எழுதியுள்ளார்கள். இவ்விரண்டு விடயங்களும் சடாகோபனை அறிந்து கொள்ளப் போதுமானவை.

இக்கவிதைத் தொகுப்பு நான்கு பிரிவு களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கிட்டிய தொலைவில், பெயர்வும் பின்னரும், வளர்க நாட்கள், கல்லூரிக் காலம் என்னும் பிரிவுகளில் அவரது பல்வேறு கவிதைகள் காணப்படுகின்றன. அதாவது பல ஆண்டுகளாகப் பதிவு செய்யப்பட்ட கவிதைகள் தொகுப்பாகியுள்ளன.

சீருடையணியும் உத்தியோகத்திற்குள் இருந்து கொண்டே சீறிப்பாய்ந்துள்ளார் சடா. துணிச்சலைப் பாராட்டத்தான் வேண்டும்.

2004ம் ஆண்டு ஆரம்பத்தில் மீன்பாடும் நாட்டின் நிகழ்வுகளை மையமாகக் கொண்டு எழுதிய 'இதயம் பேசியது' என்ற கவிதையில் அவர் தன் உணர்வை வெளிப்படுத்திவிட்டார். எதனை மையப்படுத்தி எழுதினார் என்பதை வாசிக்கும் போதே விளங்கிக்கொள்ளலாம்.

சாதனைகள் படைக்க
கையுதவிக்கு நின்று
கை கொடுத்த
என் பிரிய
வலக்கரமே!

தனியாகப் போய்நின்று
தானே இயங்குவேன்
வலப்புறந்தான்
நான் என்று
வாயால் கெடாதே!

நானும் மூளையும்
இடப்புறம் இருந்து
இடையறாது
வழங்கியதால் தானே
உன்னில்
இயக்கமே இருந்தது!

பிறகென்ன
இடப்பக்கம்
வலப்பக்கம்

முட்டாள் கையே
நீ
முறுக்கிக்கொள்ளாதே!

என்னோடும்
மூளையோடும்
உன்தொடர்பு அறுபட்டால்
நீ கையல்ல
பிணம்.

'என் கைகாட்டி மரத்திற்கு கழுத்தறுக்கப் பட்ட போது' என்ற கவிதையும் துணிச்சலானது. இப்படியான துணிச்சலை சுப்பிரமணிய பாரதியாரிடமும் காணலாம்.

விடுதலைக்கு
வீரர்கள் வேண்டுமென்றீர்
விருப்புடனே
அனுப்பிவைத்தோம்

பின்னர்
அவர்கள் சுடுவதற்கு
துவக்குகள் வேண்டுமென்றீர்
கையால கழுத்தால
காதாலையும் கழட்டி
அதையும் தந்தோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போ
அந்தத் துவக்குகளால்
சுட்டுப்பழக
தலைகளும் வேண்டுமென்று
எம்மிடமே கேட்பதுதான்
கொஞ்சம்
சங்கடமாய் இருக்கின்றது.

'குழி பறித்த பதுங்கு குழி' என்னும் தலைப்பில் இன்னொரு கவிதை. பதுங்கு குழிக்கருகில் புக்காரா போட்டகுண்டால் குழிக்குள் மூழ்கி இறந்த 20 பேர் நினைவாக எழுதப்பட்டது. அதில் சிலவரிகள்.

'இது
பதுங்கு குழிகளே
குழிபறிக்கும்
பயங்கரமான தேசம்'

இம்மூன்று கவிதைகளும் மூன்று வெவ்வேறான சாராரைச் சாடுகின்றன. தீக்குள் இருந்து கொண்டே தீயை, தீயால் சுட்டுள்ளார் கவிஞர்.

இத்தொகுப்பில் ஆராய நிறைய விடயங்கள் உள்ளன. எனினும் அவரது 'நெற்றிக் கண்ணை' மட்டும் பார்த்துள்ளோம். இடைக்கிடையே இடைவெளி நிரப்புவது போல் சில பெட்டிக் கவிதைகள் ரசிக்கத்தக்கனவாய்....

ஒரு கன்னத்தில் அறைந்தால்
மறுகன்னத்தைக் கொடு
என்று கூறிய
என் பிரிய இயேசுவே...!
இருகன்னத்திலும் அறைந்தால்
என்ன செய்வதென்று
நீ சொல்லவேயில்லை

****

இனங்களிடையே
இடைவெளி குறைபட அயராது
உழைப்பவன் மினிபஸ்
நடத்துனன்

## "மரணத்தை மரணிக்கச் செய்தவன்"

**- அ.ச. பாய்வா -**

வித்தின் அழிவு
வீரியத்தின் காலூன்றி
முக்கல் முனகலில்
முளையின் பிரசவத்தொனி
வாழ்வின்
பரவசக்கனி

அழிவின்றி
ஆக்கத்தின்
அரிவரிதான் ஏது!
இது
அன்னியத்தின் அளவீட்டுக்கும் பொருந்தும்

நித்தியமே! உன்னை
எந்த அலகுகொண்டு அளவிட?

கல்லறையும் உன்னைக்
கருவறையாய்ப் பிரசவிக்க:
அதுவரை நீ தூங்கியதோ ....



இது
முப்பத்து வருடத்தின்
மூன்று நாட் தூக்கம்
புதுமையும் போதனையும்
ஓய்வெடுத்த தூக்கம்

மரணமே ஒரு தூக்கந்தான்
தூக்கமும் ஒரு மரணந்தான்
நீ
கல்லறை தாலாட்ட
மரணத்தில் தொட்டில்கட்டித் தூங்கியவன்
மரணத்தை அழைத்து முத்தமிட்டே
அதை மரணிக்கச் செய்தவன்

மரணமும் நீயும்
எழுதிக் கொண்ட
சாசனத்தைச் சுமந்துகொண்டு
இதோ - வானதூதர்கள்
ஏது!
ஈதும் ஒரு
மங்கள வார்த்தையோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றாத்தீவு புனித யூதா ததேயுவின் திருத்தலத்தில் வழிபாடும்
# புதிய ஒலி நாடாவின் வெளியீடும்




மனதில் உறுதியும் வார்த்தையில் தெளிவும் கொண்ட அருட்பணி போல் றொபின்சன் அடிகளார் மாசித் திங்கள் 19ம் தினம் மாலை 5 மணி முதல் இரவு 12 மணி வரை "மனம் மாறி நற் செய் தியை நம்புங்கள்" என்ற இரண்டு இறை வார்த்தைகளையும் மையமாக வைத்து ஓர் இறைவழிபாட்டு இரவை ஒழுங்கு செய்திருந்தார். சுனாமியால் நிற்கதியாய் நின்று ஏங்கும் எம் மக்களுக்கு தேற்றாத்தீவு புனித யூதா ததேயுவின் திருத்தலத்தில் ஆற அமர இருந்து ஆண்டவரின் அருள்வாக்கை ஆறுதல் அளிக்கும் அரிய மருந்தாக அருந்த ஆண்டவர் அருள் புரிந்தார். அருட்பணி சந்திரா, அருட்பணி றொகான் மற்றும் அருள்வாக்குரைக்கும் போதகர்கள் அனைவரும் சிறப்புற தெட்டத் தெளிவாக மேலே கூறப்பட்ட மையக்கருத்துக்களில் தம் வார்த்தைகளைப் பொதித்துப் போதித்தனர். அதன் பின்னர் அருட்தந்தை போல் றொபின்சன் அவர்க்ளின் 6ம் 7ம் ஒலி நாடாக்களின் வெளியீட்டு விழா நடைபெற்றது. கன்னித் தமிழ் கணீரென ஒலிக்கக் கம்பீரமாக நின்று அருட்பணி மதுராங்கன் குருஸ் அவர்கள் அழகுற முன்னுரை வழங்கி அனை வரையும் அக்களிக்க வைத்தார். அருட்பணி போல் றொபின்சன் அவர்கள் ஆண்டவரில் அசையாத நம்பிக்கை வைத்து அருள்வாக்கை செவிக்கினிய கீதமாக இசைமீட்டி இயற்றிப் பாடிய ஒலிநாடாக்கள் இன்று அகிலம் முழுவதுமே சுற்றி வலம் வருகிறது என வர்ணித்தார். அவரைத் தொடர்ந்து குரு முதல்வர் அருட்பணி தேவதாசன் அவர்கள் ஆயரின் பெயரால் ஆசியுரை அழகுற வழங்கி வைத்து வாழ்த்தினார். ஆலயங் கள், இல்லங்கள், இறந்தோர் இல்லம், நோயாளர், நொந்து போனோர், சலிப்புற்றோர், கலங்கியோர் இன்னும் திருவழிபாடு, திருப்பலி, திருவிழா, திருமுழுக்கு, திருமணம் இப்படி எல்லா இடங்களிலும், எல்லா வேளை களிலும், எல்லா மூலை முடுக்கு களிலும் அருட்பணி போல் றொபின்சன் அடிகளாரின் பாடல் கள் இனிதே இசைக்கப் பட்டு இதயங்களை இறைவன்பால் ஈர்க்கின்றன என மொழிந்தார்.

அதன் பின்னர் மட்டக்களப்பு மறைக் கோட்ட முதல்வர் அருட் பணி இஞ்ஞாசி யோசப் அடிகளார் வல்லமைக் கீதம் 7வது ஒலி நாடா பற்றி ஆய்வுரை ஆற்றினார்.

அவ் ஒலி நாடா வில் அமைந்துள் ஒவ்வொரு பாடலும் வேதாகமத்தை அடிப்படையாக வைத்தே எழுதப்பட்டுள்ளன. முதலாவது பாடல் தொடக்க நூல் 1ம் அதிகாரத்தில் அமைந்துள்ள ஆவியைப் பற்றி எழுதப் பட்டுள்ளது. அடுத்த பாடல் பிலிப் 3/8ல் கூறப்பட்டுள்ளபடி கிறீஸ்து இயேசுவைப் பற்றிய அறிவே ஒப்பற்ற செல்வம் எனவும், 3வது பாடல் என் உயிரே என் இறைவா என் உயிராலே உன்மேல் தாகம் கொண்டேன் என உள்ளத்தை உருக்குவதாக உன்னதமான கீதங்களாக அமைந்துள்ளது. இப்பாடல் திருப்பாடல் 63ஐ அடிப் படையாக வைத்து எழுதப் பட்டுள்ளது. அதை அடுத்த பாடல் தூய பவுலின் வாழ்வை ஒட்டி அமைக்கப்பட்டுள்ளது. வழிகள் பல தந்து வாவென் றென்னை அழைத்து அன்புச் சீடனாய் ஏற்றுக் கொண்டீரே என எழுதப்பட்டுள்ளது. 5வது பாடல் பொய்மை நிறைந்த பாரில் பொய்கள் இல்லாமல் பொருந் தனைகள் செய்வேன் என எழுதப்பட்டுள்ளது. அடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் தொ.நூல் 2/5 யோசேப்பு தனது துன்பங்கள் அனைத்தையும் எண்ணித் தன் தலைமகனுக்கு "மனாசே" என்று பெயரிட்டார். பின்னர் தனக்கு ஏற்பட்ட புதுவாழ்வை மகிழ்ச்சியான வாழ்வை எண்ணி "எப்ராயிம்" என இனிதே அமைத்துக் கொடுத்துள்ளார். இவ்வாறு எல்லாக் கீதங்களும் எம் அன்றாட வாழ்வின் அருமருந்தாக ஆறுதல், அமைதி, அகமகிழ்ச்சி தரும் இனிய பாடல்களாக அமைந்துள்ளன. இந்த ஆய்வுரையைத் தொடர்ந்து அருட்பணி போல் றொபின்சன் அடிகளார் தனது ஒலி நாடாக்களை முதலில் அருட்பணி தேவதாசன் அவர்களுக்கு வழங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து சில அருட் பணியாளர்கள், அருட் சகோதரிகள், தந்தை அவர்களுக்கு பொருள் உதவி, உடல் உதவி வழங்கிய சிலருக்கும் வழங்கி வைத்தார். சொற்ப நேர இடைவேளையின் பின்னர், தேவநற்கருணை எழுந்தேற்றம் பண்ணப்பட்டு அருட்பணி றொகான், போல் றொபின்சன் அடிகளார் ஆகியோர் மறையுரை வழங்கினர்;அருட்பணி போல் றொபின்சன் தனது மறையுரையில் சுனாமி நாட்களில் தான் கண்ட காட்சிகளை அழகுற வர்ணித்து அவை நிகழும் எனப் பல்லாயிரம் ஆண்டுகளின் முன்னர் வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளன என இனிதே எடுத்துக்காட்டுகளுடன் எடுத்து இயம்பினார். லூக் 21/21 யூதேயாவில் உள்ளவர்கள் மலைகளுக்கு தப்பி ஓடட்டும். ஏசா 5/25 "அவர்களின் சடலங்கள் கதியற்று குப்பை போல் கிடந்தன" மீக்கா 1/6 "சமாரியாவைப் பாழடைந்த மண்மேடாகவும் திராட்சை நடும் தோட்டமாகவும் மாற்றிடுவேன்" லூக் 2/25 "மண்ணுலகில் மக்கள் இனங்கள் கடல் கொந்தளிப்பின் முழக்கத்தினால் கலங்கி என்ன செய்வதென்றறியாது குழப்பம் அடைவார்கள்.

நாம் விழிப்பாய் இருந்து செபம் செய்ய வேண்டும், பரிசுத்தமாய் இருக்க வேண்டும், தெய்வ பயத்தோடு இருக்க வேண்டும். மனித பாவம், பொய், கோபம், எரிச்சல், பொறாமை ஆகியன நீதிமான்களை அழிக்கின்றது. தொ.நூல் 4/10 "நீ என்ன செய்து விட்டாய். உன் சகோதரனின் இரத்தத்தின் குரல் மண்ணில் இருந்து என்னை நோக்கி கதறிக் கொண்டிருக்கின்றது. தீய வழிகளை விட்டு நல்வழி நடவுங்கள். இயேசுவை நம்பிக்கையுடன் பற்றிப்பிடித்தால் அவர் நமக்கு விடுதலை தருவார் என எடுத்துரைத்தார். இதனைத் தொடர்ந்து குணமளிக்கும் வழிபாடும் திருப்பலியும் நடைபெற்றதுடன் அன்றையதின வழிபாடு இறையருளால் நிறைவுற்றது.

***அருட்சகோதரி***
***லூட்ஸ் அருளானந்தம் (F.M.M)***
***தேற்றாத்தீவு.***

## இயேசுவின் கல்லறை



கல்லறையில் இரண்டு அறைகள் உண்டு. முன்னனறையில் மக்கள் கூடிச் சடங்குகள் செய்யும் இடமாகவும் பின்னறையில் உள்ள கற்பாளத்தில் உடலை வளர்த்தி வைப்பதற்கும் பயன்பட்டது. கல்லறைக்குச் செல்வதற்கு குனிந்துதான் செல்ல வேண்டும். உள்ளே ஒரே நேரத்தில் மூன்று பேருக்கு மேல் இருக்க முடியாது. இயேசுவை அடக்கஞ் செய்து வளர்த்தியதாகக் கூறப்படும் கற்பாளத்தின் மேல் ஒரு பளிங்குக் கல் வைத்துள்ளனர். அதுவே திருப்பலிப் பீடமாகப் பயன்படுத்துகின்றது. ஏனையவர்கள் வெளியே நின்று பங்கு கொள்ள மூவர் மட்டுமே உள்ளே சென்று திருப்பலி நிறைவேற்றலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரியாதன புரிந்தன...

## சிறுகதை

மரியதாசன் மெதுவாகச் சிகரட் புகையை உள்ளிழுத்து வெளியே விட்டுக் கொண்டிருந் தான். மூக்கின் வழியாகவும், வாயின் வழியாகவும் புகை வெளியே வந்துகொண்டிருந்தது. பின்னர் அவன் மெலிதாக இருமிக்கொண்டு நெஞ்சைத் தடவிக் கொண்டான்.

'சுனாமியின்' பின் அவன் மாறிவிட்டான் அவனிடம் இருந்த பிடிவாதம், கோபம், மூர்க்கம் எல்லாம் இல்லாமல் போய் விட்டன. இதைப்பற்றி மற்றவர்கள் ஆச்சரியப்பட்டது பெரிய விடயம் இல்லை: மரியதாசனே ஆச்சரியம் அடைந்தது தான் ஆச்சரியம்.

அந்த பிரமாண்டமான பாடசாலையின் ஒரு வகுப் பறையின் மூலையில் மரிய தாசனின் குடும்பம் இருந்தது. அவ் வகுப்பறை 'யுனிசெப்' கொடுத்த படங்கினால் இரண் டாகப் பிரிக்கப்பட்டு, இருபுறமும் இருகுடும்பங்கள் தங்கியுள்ளன. அப்பாடசாலையின் வெளியே அகதிமுகாம் என்ற தற்காலிகப் பெயர்ப்பலகை.

திடீரென வெளியே பெரிய ஆரவாரம். யன்னலால் எட்டிப் பார்த்தான் மரியதாசன். பதாதை களுடன் பிள்ளைகள் பலரும், அவர்களின் பெற்றோர்களும் பாடசாலை வளவினுள் நின்றனர்.

''பாடசாலையைத் திறவுங்கள்''
''படிப்பைப் பாழாக்காதே''
''அகதிகளை இடமாற்றுங்கள்''
''எங்கள் சொத்து கல்வியொன்றே''

சுலோகங்களும் சோகங்களும் பாடசாலையை அதிரவைத்தன.

''எங்களுக்கு இருக்க வீடில்ல... இருந்த சொத்தங் களுமில்லை... இவங்களுக்கு படிப்பு வேண்டுமாம்... அலையில அம்புட்டு இருந்தாத்தான் தெரியும் கஷ்டம்'' என்று மரியதாசனின் பக்கத்து அறைக்காரன் கோப மாய்க் கத்தினான்.

முன்பு என்றால் மரிய தாசனும் இப்படித்தான் கோபப் பட்டிருப்பான். பாய்ந்து அடித்தும் இருப்பான்: அப்படிச் செய்தும் இருக்கின்றான். திடீரென மரிய தாசனுக்கு பழைய சம்பவம் ஒன்று நினைவுக்கு வந்தது. வலையிறவு துறையடியில் ஒருவர் தனக்கு அடித்ததும் தான் திருப்பியடிக்கப் போனதும் மெல்லிய நிழலாய் ஞாபகம் வந்தது. * * *

தொண்ணூறாம் ஆண்டின் பிற்பகுதி! மீண்டும் யுத்தம் வெடித்து விட்டது. வந்தாறுமூலைப் பல்கலைக் கழகம் அகதிமுகாமாகி விட்டது. முப்பதாயிரம் குடும்பங்கள் பரிதவித்துப் போய், நிர்க்கதியாய் இருந்தன. மின்சாரம் இல்லை. குடி தண்ணீர் இல்லை. சுமார் மூன்று மாதங்கள் அம்முகாம் இயங்கியது. அங்கு ஏற்பட்ட வயிற்றோட்டம் காரணமாக சுமார் முப்பத்துமூன்று குழந்தைகள் மரித்தும் போயின. இதற்கிடையில் நடத்தப்பட்ட இராணுவ நட வடிக்கை காரணமாக சுமார் நூற்று ஐம்பது பேர் கொத்தாக அள்ளிக்கொண்டு போகப் பட்டனர்.

அங்கிருந்த குடும்பங் களில் ஒன்று சிவநாதனின் குடும்பம். அவன் அலுவலகம் ஒன்றின் சிற்றூழியன்; அமைதி யானவன்; கோபப்படாதவன். மனைவியும், ஒரு மகனும் பழைய சைக்கிள் ஒன்றும்தான் அவனது சொத்து. மற்றயவைகளெல்லாம் எரிக்கப்பட்டுவிட்டன. சுற்றி வளைப்பில் அப்பாவிகளான அவனது தம்பியும், மனைவியின் தம்பியும் கொண்டு செல்லப் பட்டனர்.

மகனிற்கு வயிற்றோட்டம்; மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு செல்ல வேண்டும்; பிரதான பாதையால் செல்ல முடியாது. இடையில் ஏறாவூர், இராணுவ முகாம்கள். எல்லோ ரும் பழிவாங்கும் வெறியில்....

பல்கலைக்கழக பின் மதில்களைக் கடந்து தீவு என்ற இடம், தொடர்ந்து இடுப்பளவு நீர் ஓடும் சிறுகால்வாய், பின்னர் புல்லுமலை வீதியை ஊடறுத்து பன்குடாவெளி, அங்கிருந்து வாவியூடாகத் தோணிப் பயணம், பின் மகிழவெட்டுவான், நரிப்புல் தோட்டம் எல்லாம் சைக்கிள் ஓடி இறுதியில் கன்னன்குடா துறை யடி. சிவநாதன் களைத்து விட்டான். வலையிறவுப் பாலம் போக்குவரத்துக்கு மூடியிருந்தது. கன்னன்குடாத் துறையடியில் இருந்து புதூரை நோக்கித் தோணிப் பயணம்; வாவி கொந்தளித்தது, சிவநாதனின் மனது போல். எங்கிருந்து துப்பாக்கி வேட்டுகள் வருமோ என்ற பயம் வேறு. தோணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதூர்த் துறையை அடைந்தது. சிவநாதன் சைக்கிளை இறக்கித் தோளில் சுமந்து தண்ணீருக்குள் நடந்து கரையை அடைந்து மகனையும், மனைவியையும் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு ஆஸ்பத்திரிப் பக்கம் சைக்கிளை மிதித்தான். அப்போது எதிர்ப்பக்கமாய் இளைஞன் ஒருவன் சைக்கிளில், கையில் படக்கசற்றுடன் வந்து கொண்டிருந்தான். இதைக் கண்ட சிவநாதனிற்கு பயங்கரமான கோபம் வந்தது. தடாரென்று சைக்கிளை விட்டிறங்கி அந்த இளைஞனைப் பிடித்துத் தள்ளி

"நாங்க மூண்டு மாசமா அகதியாகக் கிடந்து வாறம். சாப்பாடில்ல... கையில காசில்ல... வீடில்ல... புள்ள சாகக் கிடக்குது... டவுன்காரன்க படம் பார்த்து திரியிரீங்க என்னடா..."

அவனை அடிக்க, அவனும் திரும்பி அடிக்க... மற்றவர்கள் சமாதானப்படுத்தி சமாளித்து... ஆஸ்பத்திரிக்கு சிவநாதனை பிள்ளையுடன் அனுப்பி வைத்தனர். அதன் பின்னர் அவ்விளைஞனை சிவநாதன் சந்திக்கவேயில்லை. ஆனால் வாழ்க்கையில் காலடி எடுத்தும் வைத்திருக்காத அழகான படுவான்கரை மண்ணை அவன் சைக்கிளில் கடந்திருந்தான். (அது சரி... கையில் படக்கசற்றுடன் வந்த இளைஞன் யாரென்று தெரியுமா...? அது நம்ம மரியதாசன்தான்)

மரியதாசன் சாப்பிடுங்க...' என்ற மனைவியின் குரல் கேட்டு நினைவில் இருந்து மீண்டான். அன்று அந்த ஆள் தனக்கு அடிக்க வந்ததிலும் ஒரு நியாயம் இருப்பதை பதினான்கு வருடங்களின் பின்னர்தான் அவனால் உணரமுடிகின்றது: பாடசாலைப் பிள்ளைகளின் கோரிக்கைகளில் உள்ள யதார்த்தத்தையும் அவனால் புரிந்து கொள்ள முடிகின்றது: பக்கத்து அறைக் காரரின் ஆதங்கத்தையும் அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

விபூதிப் புதனன்று 'பாதர்' விபூதியைப் பூசி 'மண்ணிலே பிறந்த நீ மண்ணிற்கே போவாய்..." என்று சொன்னதின் அர்த்தமும் அவனுக்குப் புரிகின்றது. முன்பென்றால், சாமி சாபம் போடுகிறார்' என்று கோபித்திருப்பான்.

இவ்வளவு மாற்றத்திற்கும் காரணம் என்ன? புத்தருக்கு போதி மர நிழலில் ஞானம் பிறந்தது. மரியதாசனுக்கோ கடற்பேரலையில் அள்ளுண்டு போன அவனது குழந்தைதான் ஞானம் கொடுத்தது. விலை அதிகம்தான்.

தூரத்து அறையொன்றில் இருக்கும் பிள்ளையொன்று சத்தமாய் வாசிப்பது மரியதாசனுக்கு தெளிவாகக் கேட்டது.

"எது நடந்ததோ
அது நன்றாகவே நடந்தது....
எது நடக்கிறதோ
அது நன்றாகவே நடக்கிறது..."

(யாவும் கற்பனை)

**-பெஸ்லியோ வாஸ்**

## கல்வாரி மலை

கல்வாரி மலை என்பது நாம் எதிர்பார்ப்பது போல் பெரிய மலை அல்ல. ஏறக்குறைய நிலத்திலிருந்து நாற்பத்தியைந்து அடியளவில் உயர்ந்து மண்டையோடு உருவத்தில் அமைந்திருந்ததால்தான் அதற்கு 'மண்டையோட்டு மலை' எனப் பெயர் வைத்தார்கள் போலும். இன்று அதனை மலையாகப் பார்க்க முடியாது. ஆனால் அதன் மேல் இரண்டு பீடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடத்திற்கு மேல் உள்ள பீடம் 'கிரேக்க மரபு வழுவாத் திருச்சபைக்கும்' இயேசுவுக்கு ஆடைகள் களையப் பட்ட இடத்தின் மேலுள்ள பீடம் 'உரோமன் கத்தோலிக்க திருச்சபைக்கும் உரியதாகக் கூறப்படுகின்றது. கல்வாரி மலையின் பாறையைப் பீடத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கண்ணாடி வழியாகத்தான் பார்க்க முடியும்.

- நன்றி 'புனித நாட்டுப் பயணம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காயின் ஆபேலின் கதை

**தொடக்க நூல் 4ம் அதிகாரம்**

முதல் மனிதனின் பாவமும் அதன் விளைவாக அவன் பெற்றுக் கொண்ட கடவுளுடைய சாபமும், எவ்வாறு மனுக்குலம் முழுவதையும் பாதித்தது என்பதை விளக்கவே இவ்வதிகாரம் எழுதப்பட்டது. பாவம் எவ்விதம் மனுக்குலத்தின் சொத்தாகிறது என்பதனை முதல் 11 அதிகாரங்களும் நன்கு விளக்குகின்றன.

இதன்படி முதல் பெற்றோரின் பிள்ளைகளாகிய காயினும், ஆபேலும் தோட்டம் செய்தும், மந்தை மேய்த்தும் சீவனம் நடத்தியதாகக் கூறப்படுகிறது. இருவரும் இறைவனுக்குக் காணிக்கை செலுத்துகின்றனர். ஆபேலின் காணிக்கையை இறைவன் ஏறெடுத்ததாகவும், காயினின் காணிக்கையை ஏறெடுத்துப் பார்க்கவில்லை எனவும் கூறப்படுகின்றது. இதனால் கோபம் கொண்ட காயின் ஆபேலைக் கொலை செய்கின்றார். கடவுள் தோன்றி காயினிடம் கணக்குக் கேட்கிறார். அவனைக் கடிந்து கொண்டார். இதன் பயனாகப் பூமி ஒரு போதும் பயனளிக்காது என்றும் அவனும் நாடோடியாய் அலைந்து திரிவான் எனவும் சபிக்கப்படுகின்றான். தன்னை மற்றவர்கள் கொன்று போடுவார்கள் எனப் பயந்து கெஞ்சியதால் அவனைக் கொல்பவன் மீது 7 மடங்கு பழி சுமத்தப்படும் எனவும் உறுதி அளிக்கிறார். அதன் பின்பு காயின் திருமணம் முடித்துப் பல பிள்ளைகளைப் பெற்றதாகக் கூறப்படுகிறது.

இந் நிகழ்வினை ஆராய்ந்து பார்த்தால், இதில் எவ்வளவு உண்மை உண்டு என்பது புலனாகின்றது. இங்கு காயின் பயிரிடுபவனாகவும், ஆபேல் மந்தை மேய்ப்பவனாகவும் காட்டப்படுகிறது. ஆனால், ஆராய்ச்சியின் படி முதல் மனிதன் நாடோடியாய்த் திரிந்ததாகவும் வேட்டையாடிக் காட்டுக் கனிகளைத் தின்றதாகவும் கூறப்படுகிறது.

நோவா முதல் தோட்டக்காரன் என தொடக்க நூலில் கூறப்பட்டுள்ளது. (தொ.நூ 9:20). இருப்பினும் காயின் மற்றவர்களுக்குப் பயப்படுவதாயும் கூறப்படுகிறது. ஆனால் அங்கு ஆதாம் ஏவாளைத் தவிர வேறு யாரும் இருக்கவில்லை. மற்றும் காயின் திருமணம் முடித்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் ஏவாளைத் தவிர வேறு பெண்களே அங்கு இல்லை. எது எவ்வாறாயினும் ஆசிரியர் பிற்காலத்தில் நடந்த ஒரு நிகழ்வை இங்கு புகுத்தி ஆழமான கருத்தை விளக்க முயல்கிறார். அதாவது ஆதாமில் தொடங்கிய பாவம் எவ்வாறு வேர் விட்டு மனுக்குலம் முழுவதையும் தொடர்கிறது என்பதை விளக்குவதே முக்கிய நோக்கமாய்க் கொள்கிறார்.

காயின் ஆபேல் சண்டை நடந்திருக்கலாம். எனவே, பாவத்தின் பயனாக சமூகத்திலே கோபம், வஞ்சகம், பொறாமை, கொலை ஆகிய அனைத்தும் எவ்விதம் நுழைகிறது என்பதைக் காட்ட இக்கதையை நல்லதாகக் கண்டார் ஆசிரியர். ஆதாமின் வீழ்ச்சிக்கும் காயினுடைய கொலைக்குமிடையே உள்ள தொடர்பைக் காட்டி, காயினைக் ஆதாமின் முதல் குமாரன் எனக் குறிப்பிட்டார். காயினைக் கொல்பவன் மீது 7 மடங்கு பழி சுமத்தப்படும் எனக் கூறப்படுவது, பிற்காலத்தில் மக்கள் மத்தியில் ஒருவன் செய்த செயலுக்காகப் பலர் கொல்லப்படுவதைச் சுட்டிக்காட்டுகிறது. எவ்வாறாயினும், ஆசிரியரின் முக்கிய நோக்கம், பாவமானது எவ்வாறு வேர் விட்டு வளர்கிறது என்றும், அதனால் மனுக்குலத்திற்குள் ஏற்பட்ட விளைவுகளையும் இந்த அதிகாரங்களினூடாக விளக்குவதாகவே அமைகிறது என்பதை நாம் விளங்கிக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறப்பு தரும் உயிர்ப்பு

எகிப்து நாட்டில் வாழ்ந்த ஓர் அதிசயப் பறவை இனத்தைப் பற்றிய மரபு ஒன்று உண்டு. பீனிக்ஸ் என்ற பறவை பல ஆண்டுகள் உயிர் வாழ்ந்த பின் தன் மரணம் நெருங்கி வருவதை உணர்ந்து சிறு குச்சிகளாலும் வாசனைப் பொருள்களாலும் அழகிய கூடு ஒன்று கட்டி அக் கூட்டிற்குள் பல நாட்கள் இருந்து செத்து விடும். அதனுடைய உடலிலிருந்து ஒரு புழு தோன்றி, அதன் பிறகு அது பறவையாக உருவெடுத்துக் கூட்டை உடைத்துக்கொண்டு வெளியே வருமாம். இவ்வாறு தாயின் இறப்பிலிருந்து புதிய பறவை ஒன்று பிறக்குமாம்.

**காலையில் கல்லறையைத் தேடியவர்கள் :**

இயேசுவின் சீடர்கள் அவர் சிலுவையில் அறையப் பட்டபோது அவரை விட்டு ஓடிப்போனார்கள்: (மாற்கு 14:50). ஆனால் கலிலேயாவிலிருந்து இயேசுவைப் பின்பற்றி அவருக்குப் பணிவிடை செய்துவந்த பெண்கள் தொலைவில் நின்று சிலுவையில் அறையுண்ட இயேசுவை உற்று நோக்கிக் கொண்டிருந்தனர் (மாற்கு 15:40). ஓய்வு நாள் தொடங்குவதற்கு முன் அவசரம் அவசரமாக இயேசுவின் உடலை அடக்கம் செய்துவிட்டு வீடு திரும்பினர். இருப்பினும் நிக்கதேம் என்பவர் கொண்டுவந்த 30 கிலோ கிராம் வெள்ளைப்போளத்தையும், சந்தனத் தூளையும் இயேசுவின் உடலில் சுற்றிக்கட்டி அடக்கம் செய்தனர் (யோவான் 19:39). வாரத்தின் முதல் நாள் காலையிலேயே இயேசுவின் உடலில் நறுமணப் பொருள்களைப் பூசுவதற்காக மூன்று பெண்கள் கல்லறைக்குச் சென்றனர். இயேசுவின் திரு உடலுக்கு மரியாதை செலுத்தி அவர்மேல் உள்ள அன்பைக் காட்டவே கல்லறைக்குச் சென்றனர்.

**காலியான கல்லறை :**

இயேசு அடக்கம் செய்யப் பட்டு ஏறக்குறைய 36 மணி நேரம் ஆகிவிட்டது. அவ்வாறு இருக்க நறுமணப் பொருள்களை இயேசுவின் உடலில் பூச முடியுமா? கல்லறை வாயிலை மூடிய கல் பெரிதாயிற்றே: யார் அதை நமக்குப் புரட்டிக் கொடுப்பார் என்றெல்லாம் இப்பெண்கள் சற்றுக்கூட நினைத்துப் பார்க்கவில்லை. நடுவழியில்தான் சிந்திக்கிறார்கள். ஆனாலும் இயேசுவின்மேல் கொண்ட ஆழமான அன்பு உந்து சக்தியாக அவர்களை இயேசுவின் கல்லறைக்குத் தள்ளிக் கொண்டு போகிறது.

அ) திடீரென நிமிர்ந்து பார்க்கையில் "கல் புரட்டப் பட்டிருப்பதைக் கண்டார்கள். அது பெரியதொரு கல்" (மாற்கு 16:4) இம்மாபெரும் கல் ஓர் அடையாளமாகப் பயன்படுத்தப் படுகின்றது. இறைவனை, உயிர்த்த இயேசுவை மனிதன் எளிதில் நேரடியாகக் கண்டு அனுபவிக்க இயலாது. மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையே ஒரு திரை, தடை, பெரிய கல் உள்ளது. இந்தத் தடையை நீக்க மாபெரும் சக்தி தேவைப் படுகிறது. அது இறைவனால் மட்டுமே முடியும். அதனால்தான் மத்தேயு நற்செய்தியில் காணப்படுவதுபோல (மத்தேயு 28:2) நில நடுக்கம் எதுவும் இல்லாமலே அமைதியான முறையில் கல் புரட்டப் பட்டிருக்கிறது. இது இறைவனின் வல்லமை இயேசுவில் முழுமையாக வெளிப்படத் தொடங்கி விட்டது என்பதன் முன் அடையாளமாகும்.

ஆ) அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்: இயேசு அடக்கம் செய்யப்பட்டதை அன்று எருசலேமில் வாழ்ந்த பலர் அறிந்திருந்தனர். இயேசு இறந்ததற்கு அரசாங்கமே மரணச் சான்றிதழ் வழங்கத் தயாராய் இருந்தது. இப்பொழுது அடக்கம் செய்யப்பட்ட இயேசுவின் உடல் கல்லறையில் இல்லை. ஏனெனில் அவர் உயிருடன் எழுப்பப்பட்டார். இந்தச் செய்தியைக் கல்லறைக்குள் வெண் தொங்கல் ஆடை அணிந்து வலப்புறம் அமைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்த இளைஞர் அறிக்கையிட்டார். இங்கு "வெண்", "தொங்கலாடை", "வலப்புறம்" ஆகிய மூன்று சொற்களும் அந்த இளைஞர் மண்ணுலகைச் சார்ந்தவர் அல்லர் விண்ணுலகைச் சார்ந்தவர் என்பதை எடுத்துரைக்கின்றன.

**உயிர்ப்பு உரைக்கும் உண்மைகள்:**

"அவர் உங்களுக்குச் சொன்னதுபோலவே அவரை அங்கே (கலிலேயாவில்) காண்பீர்கள்". (மாற்கு 16:7)என்ற வார்த்தைகள் வழியாக உயிர்த்த இயேசுவின் பிரசன்னம் மறைந்துவிடவில்லை: சீடர்கள் நடுவில் இருக்கின்றது என்பது உணர்த்தப் படுகின்றது. இயேசுவின் சாவுக்கு முன்னால் அவரை நேரில் பார்த்த பலர் அவர் உயிர்த்த பின்பும் அவரைக் கண்டார்கள். ஆனால் உயிர்த்த ஆண்டவரைக் கண்டவர்கள் அவருடைய உயிர்ப்பு மறை உண்மையினால் ஊடுருவப்பட்டார்கள். எந்த ஒரு இலச்சியத்திற்காக இயேசு சிலுவையைச்சுமந்துகொண்டு முனைப்போடு நின்றாரோ அதே இலட்சிய இலக்கோடு வாழ புது வல்லமையைப் பெற்றனர். வித்தியாசமான முறையில் கிறிஸ்தவ சமூகத்தில் ஊடுருவி பிரசன்னமாய் இருந்து தங்களை உயிர்த்த ஆண்டவர் வழி நடத்திச் செல்வதை உணர்ந்தனர்.

இறந்து உயிர்த்த ஆண்டவர் இயேசு, இத்தகைய இறப்பு வழியாக உயிர்ப்பு வாழ்வில் பங்குபெற நம்மை அழைக்கின்றார். அவரது வல்லமை நம்மோடு இருப்பதால் தீமையை எதிர்க்கும் போராட்டத்தில் நமது உடைமை, உயிர் அனைத்தையும் அர்ப்பணிக்க முன் வருவோம்.

## சிலுவைப் பாரம் இறங்கட்டும்

**கவிஞர் செ. குணரத்தினம்**

ஒருநேரச் சோறுதான் உள்ளநாள் பூராவும்
உண்ணக் கிடைத்நாலும் - எனக்கு
தெருவோர வாழ்வுதான் சீவியகாலமும்
தேவன் கொடுத்தாலும்
குடியேறி மீளவும் தமிழினம் தம் மண்ணில்
குடும்பம் நடத்திடணும் - முள்
முடி சூடித் தேவனாய் அவர்படும் பாடுகள்
முற்றாய்த் தொலைந்திடணும்!

நோய்வந்து என்னுடல் நாலென மெலிந்து நான்
நொடிந்து கிடந்தாலும் - என்
தாய் கண்டும் எந்தனை நாயென்றும் பாராமல்
தள்ளியே நடந்தாலும்
ஓய்வில்லா யுத்தத்தால் ஒடிந்த தமிழினம்
ஒன்றாகச் சேர்ந்திடணும் - அவர்
வாய்பொத்திக் கைகட்டிச் சிலுவை சுமக்கின்ற
வன்முறை தீர்ந்திடணும்!

பெற்றவென் பிள்ளைகள், பெண்டாட்டியாவரும்
பிரித்தெனை வைத்தாலும் - தேவா
உற்றவென் சுற்றமும், உறவுகள் யாவுமே
உதாசீனம் செய்தாலும்
முத்தமிழ் மக்களை மூண்டுள தீயுடன்
முடிவிற்கு வந்திடணும் - அவர்
செத்தழி சீவியம் தீர்த்தவர் வாழ்விலே
சிறப்புடன் வாழ்ந்திடணும்!

உதைபட்டு என்மேனி வதைபட்டு ஊரெல்லாம்
உழன்று கிடந்தாலும் - என்
சிதை கெட்டு நாய் நரி கடிபட்டு விழுந்ததை
சிதைத்து நடந்தாலும்
புதைபட்டுப் போகாமல் தமிழினம் பூமியில்
புதுவாழ்வைக் கண்டிடணும் - துயர
கதைவிட்டுச் சமாதானம் நிலைபெற்று
அவர் வாழ்வில்
களிப்போடு வாழ்ந்திடணும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மீட்பின் வழியைக் கண்டடைந்தவர்கள்

இயேசுவின் மீட்பின் போதனையைக் கேட்டு மீட்பை அடைந்து கொண்டவர்கள் பலர். அவர்களில் சிலர்:

- ⁎ சீமோன் என்னும் பரிசேயனின் வீட்டில் அவரது பாதங்களைத் தைலத்தால் பூசிய பாவிப்பெண் - லூக்கா 7:36-48
- ⁎ கெரசேனர் பகுதியில் பேய்பிடித்தவன் - லூக்கா 8:26-39
- ⁎ முடக்குவாதக்காரன் - லூக்கா 5:17-26
- ⁎ சக்கேயு - லூக்கா 19:1-10

இத்தகையோர் எவ்வாறு மீட்பின் வழியைக் கண்டடைந்தனர் எனச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

**பாவிப்பெண்:**

பாவத்தளையில் அமிழ்ந்து ஆன்மாவை இழந்து கிடக்கின்றவள் அந்தப் பாவிப்பெண். அவளது செவிகள் இயேசுவின் போதனையைச் செவிமடுத்துக் கேட்டன. அவளது பாவ வாழ்வைக் கண்டுணர்ந்தாள். அதனை ஏற்றாள். அவளது தேவை இயேசுவை ஏற்பதில் அடங்கியிருந்தது. அதற்காகத் தன் வாழ்வை மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. எனவே, அவள் ஒரு தீர்மானத்திற்கு வந்தாள். சீமோன் என்ற பரிசேயனின் வீட்டிலிருந்த இயேசுவைத் தேடிவந்தாள். தன் மனமாற்றத்தை வெளிப்படுத்தினாள். அதையேற்ற இயேசு அவளுடைய பாவங்களை மன்னித்து "உனது விசுவாசம் உன்னை இரட்சித்தது. சமாதானமாய்ப் போ" என்று கூறி அவளுக்கு மீட்பளித்தாரென அறிகிறோம்.

**கெரசேனர் பகுதியில் பேய்பிடித்தவன்:**

அவன் அசுத்த ஆவியினால் ஆட்கொள்ளப் பட்டவன். அதனால், மனநோயாலும் வருந்தினான். கிறிஸ்து அவனுக்குத் தேவையான மன அமைதியை வழங்கினார். எல்லோருக்கும் தெரியும்படியாக அவனைக் குணப்படுத்தியதைக் கூறும்படி சொன்னார்.

**முடக்குவாதக்காரன்:**

முடக்கு வாதக்காரனின் பாவங்களை மன்னித்த அதேவேளையில், இயேசு அவனுக்கு உடல்நலத்தையும் வழங்கினார். அவருக்குப் பாவங்களை மன்னிக்க அதிகாரமில்லை எனச் சிலர் குற்றஞ் சாட்டினர். ஆனால், முடக்குவாதக்காரன் அவரில் முழு விசுவாசங் கொண்டான். அதன் பயனாகப் பூரண குணம் பெற்று இறைவனைப் புகழ்ந்து கொண்டு சென்றான்.

**சக்கேயு:**

மீட்படைந்தவர்களில் சக்கேயுவே மிகச் சிறப்பாகக் குறிப்பிடக்கூடியவர். அவர் ஓர் ஆயக்காரன். யூத சமுதாயத்தில் பாவிகளென ஒதுக்கப்பட்டு தூற்றப்பட்டவர்கள் இந்த ஆயக்காரர்கள். அப்படிப்பட்ட சக்கேயு இயேசுவைக் காண விரும்பினான். ஆனால், அவரே அவனைத் தேடிச் சென்றார். அத்திமரத்திலிருந்த அவனை அழைத்தார். அவனது வீட்டுக்குச் சென்றார். சக்கேயுவோ மகிழ்ச்சிப் பெருக்கடைந்தான். அவன் மனமாற்றம் பெற்றான். அதனைச் செயலில் காட்டினான். "ஆண்டவரே என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்து விடுகிறேன். எவர் மீதாவது பொய்க் குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்". என்று இயேசுவிடம் கூறினான். இதன் மூலம் அவனது மனமாற்றம் வெளிப்பட்டது. அந்த மனமாற்றம் இயேசுவிடமிருந்து அவன் அடைந்த மீட்பிலிருந்து பெற்றுக் கொண்டதாகும்.

இந்த நான்கு சம்பவங்களிலிருந்தும் நாம் பல படிப்பினைகளைப் பெறுகிறோம்.

⁎ பாவிப்பெண் மீட்படைந்ததிலிருந்து நாமும் தவறுகளைகளைச் செய்கிறோம், அவருக்காக மனம் வருந்தி ஒப்புரவுத் திருவருட்சாதன மூலம் மீட்பைப் பெறமுடியும் என அறிகிறோம்.

⁎ கெரசேனர் பகுதியில் பேய்பிடித்தவன் குணமடைந்ததிலிருந்து நாமும் உடல், உளநோய்களுக்கு ஆளாகும் சந்தர்ப்பங்கள் ஏற்படும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது விசுவாசத்தைத் தளரவிடாது, வேறு குருட்டுப் பக்தி வழியில் செல்லாது, இறையுதவியால் குணமடையமுடியுமென்று விசுவசிக்க வேண்டுமென நாம் அறிகிறோம்.

⁎ முடக்குவாதக்காரன் குணமாகியதிலிருந்து, நமக்கும் மனவேதனைகள் காரணமாக நோய்கள் ஏற்படலாம். எமது மனச்சாட்சி எம் பாவங்களையறியும், அதனால் ஒரு தவிப்பு ஏற்படும். அவற்றுக்கு மன்னிப்புப் பெறுவதன் மூலம் அமைதி பெறலாம். அதற்கு உண்மையான மனஸ்தாபம் தேவை. மன்னிப்புப் பெற்றுக் குணமானபின் நன்றி கூறி புகழ மறக்கக் கூடாது என அறிகிறோம்.

⁎ சக்கேயுவின் மீட்பைப் பற்றியறியும் நாம் எமக்கும் இத்தகைய மனமாற்றம் அவசியமாகும், நமது குற்றங்களைப் பற்றி நேர்மையாக மனஸ்தாபப்பட்டு, வாழ்க்கையைப் புதுப்பித்துக் கொள்ளுவது அவசியமாகும் என்பதை அறிகிறோம்.

இவ்வாறு திருவிவிலியத்தில் நாம் காணும், இயேசுவின் மீட்பைக் கண்டடைந்தோர் பற்றியறிகையில் எமது விசுவாசத்தில் மென்மேலும் ஊன்றி நின்று, எம் வாழ்வைச் செம்மையாக்கி அவருடன் இணைப்பதன் மூலம், நிறை வாழ்வைப் பெற முடியும் என்று நம்ப வேண்டும்.

மெற்றில்டா

## கத்தோலிக்க இளைஞருக்குத் தண்டனை

பாகிஸ்தானில் தெய்வ நிந்தனைச் சட்டத்தின்கீழ் கத்தோலிக்க இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான். இவனுக்கு ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை அளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தானில் புல்டான் மறை மாவட்டத்தைச் சேர்ந்த 30 வயதான பசீர் மாற்டி, குர்ஆனின் பக்கங்களைக் கிழித்தான் என்று குற்றம் சாட்டப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளான், என்று அம்மறை மாவட்ட ஆயர் ஜோசப் கவுல்ஸ் கூறியுள்ளார்.

கடந்த கால அனுபவங்களைப் பார்க்கும்போது தேவ நிந்தனைக் குற்றம் சாட்டபட்டவர்கள் தப்பியது மிகவும் கடினம் என்று வருத்தத்துடன் கூறிய ஆயர்...

கடந்த வருடம் ஐப்பசி மாதத்தில் புதிய சட்டம் கொண்டு வந்த பின்னரும் கிறீஸ்தவர்கள் கடுமையாகத் தாக்கத்துக்குள்ளாகிறார்கள் என்றும் கூறினார்.

1927ல் இருந்து 1986 வரை தேவ நிந்தனைச் சட்டம் பாகிஸ்தானில் தவறாகப் பயன்னடுத்தப்பட்டதாக பாகிஸ்தானின் சமயத்துறை அமைச்சர் இஜாஜ்உல்கட் ஒப்புக்கொண்டுள்ளார் என்பது கவனிக்கத்தக்கது.

## திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் கருதினால்களின் எண்ணிக்கை குறைகிறது.

திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமை பெற்ற கருதினால்களின் எண்ணிக்கை 119ல் இருந்து 118 ஆகக் குறைந்துள்ளது.

கடந்த மாசி மாதம் 22ம் திகதி அன்று அங்கோலாக் கருதினால் அலெக்சான்றா தனது 80வயது நிறைவை முன்னிட்டு ஓய்வு பெற்றார்.

இதனால் புதிய திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை இழக்கிறார்.

திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமை இல்லாத கருதினால்களின் எண்ணிக்கை 64ல் இருந்து 65 ஆக உயர்ந்துள்ளது.

இம் மாதம் பங்குனி 18ல் நிக்கோதேயா கருதினால் தனது 80வது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார். எனவே இவ்வெண்ணிக்கை மேலும் 117 ஆகக் குறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விவிலியம் கற்போம் - 36

எகிப்து, மற்றும், அனைத்து, ஏனெனில், இரவிலேயே, போங்கள், உங்கள், விரைவில், எல்லோருமே, கேட்டு

## அறிவை வளர்ப்போம் - 36

1) கரும்பு
2) யூரிககாரின்
3) பேரை வாவி
4) மாரீசன்
5) அம்பாறை
6) ஜப்பானிய மொழி

**போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை இம்முறை எவருமே எழுதவில்லை**

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை அளித்து ஐம்பது ரூபா பரிசு பெறுவோர்!**

- கிறேசி போல்
  38/6, கொத்தி ஒழுங்கை
  திருகோணமலை.

- அ. வினிதா
  மரியநாயகம் மகளிர் இல்லம்
  மாவடி வேம்பு, சித்தாண்டி.

**பாராட்டுப் பெறுவோர்**

- அ. கோபினா
  ஓசானம் இல்லம்,
  சத்துருக்கொண்டான்,
  மட்டக்களப்பு.

- மேரி ஹெலன் பிரீத்திக்கா சந்திரகுமார்,
  C/O R.I. இராஜேந்திரம்,
  508/2, திருமலை வீதி,
  மட்டக்களப்பு.

**போட்டியில் பங்குகொண்டவர்கள் அனைவருக்கும் எமது நன்றி.**

(ஆ - ற்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுவர்களுக்கு மட்டும்**

**முடிவுத்திகதி 30-04-2005**




# விவிலியம் கற்போம் - 38

**(விடுதலைப் பயணம் 14: 1-10)**

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

ஆண்டவர் மோசேயிடம் "இஸ்ரயேல் மக்கள் திரும்பிச் சென்று .......................... உக்கும் பாகால் செபோனின் அருகிலுள்ள கடலுக்குமிடையே அமைந்த ....................... க்கு எதிரே கடல் அருகில் பாளையம் இறங்கும்படி அவர்களிடம் சொல். பார்வோன் இஸ்ரயேல் மக்களைக் குறித்து, ....................... குறுக்கிட்டதால் அவர்கள் இன்னும் நாட்டிற்குள்ளேயே அலைந்துகொண்டிருப்பார்கள் என்று கருதுவான் ......................... மனத்தை நான் இறுகிப் போகச் செய்வேன்: அவனும் உங்களைத் துரத்திக்கொண்டே வருவான். அப்போது பார்வோனையும் அவன் படைகளையும் .......................... நான் மாட்சியுறுவேன். நானேஆண்டவர் என எகிப்தியரும் உணர்ந்து கொள்வர்" என்று கூறினார். மக்கள் ஓடிப்போய் விட்டார்களென எகிப்திய மன்னனுக்கு அறிவிக்கப்பட்டபோது, பார்வோனின் மனமும் அவன் .......................... மனமும் இம்மக்களைப் பொறுத்த மட்டில் மாற்றம் கண்டது. "நாம் இப்படிச் செய்துவிட்டோமே! நமக்கு .......................... செய்த இஸ்ராயேல்ரை ஏன்தான் அனுப்பிவிட்டோம்" என்று அவர்கள் பேசிக்கொண்டனர். எனவே, அவன் தன் ....................... பூட்டித் தன் ஆள்களையும் கூட்டிக்கொண்டு கிளம்பினான். ஆண்டவர் மன்னனின் மனம் இறுகிவிடச் செய்தார்: அவனும் ......................... மக்களைத் துரத்திச் சென்றான். இஸ்ராயேல் மக்களோ வெற்றிக்கை உயர்த்தியவாறு சென்று கொண்டிருந்தனர் ............................ அவர்களைத் துரத்திச்சென்று அவர்களை நெருங்கினர். இஸ்ரயேல் மக்களும் எகிப்தியர் தங்களைப் பின்தொடர்ந்து வந்துகொண்டிருப்பதைக் கண்டு ஆண்டவரை நோக்கிக் கூக்குரல் எழுப்பினர்.


**விடைகள்: எகிப்தியர், பார்வோனின், மிக்தோல், இஸ்ரயேல், பாலைநிலம், தேரை, பிககிரோத்து, வென்று, ஊழியம், அலுவலர்.**

*(இவ்வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவுவை வளர்ப்போம்-38

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. உலகின் நுரையீரல் என்று சொல்லப்படும் புகழ் பெற்ற காடு
   (இமயமலைக்காடு, சிங்கராஜவனம், அமேசன் காடு)

2. தமிழ் நாட்டு மாமல்ல புரத்துக் கற்கோயில்களை அமைத்தவர்
   (சோழன், பாண்டியர், பல்லவர்)

3. மகாபாரதம் பாடியவர்
   (வியாசர், வில்லிப்புத்தூராழ்வார், கம்பர்)

4. இந்தியாவின் இரும்புப் பெண்மணி என்று அழைக்கப்பட்டவர்
   (சரோஜினி நாயுடு, இந்திராகாந்தி, பூலான்தேவி)

5. புலி பசித்தாலும் ....................................
   (பூவைத் தின்னாது, இலையைத் தின்னாது, புல்லைத் தின்னாது)

6. கண்டியைக் கடைசியாக ஆண்ட மன்னனின் தமிழ்ப் பெயர்
   (வெள்ளைச் சாமி, பொன்னுச் சாமி, கண்ணுச்சாமி)

பெயர் : ..........................................................................................

முகவரி : ..........................................................................................

..........................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:

விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்-38
தொண்டன்
அ.பெ. எண் 44
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணக வாழ்வின் 16ம் ஆண்டு நினைவு

தோற்றம்
1926-01-13

மறைவு
1989-03-31



# அமரர் D.S.K. வணசிங்க

ஆசிரியன் நீ ஒரு
அகல் விளக்கு
பள்ளிக் கூடமெல்லாம்
இந்த விளக்கு
பகலவனாகவே பிரகாசித்தது.

குரு என்னும் சொல்லுக்கு
கும்மிருட்டைக்
கொளுத்துபவன்
என்று தானே பொருள்

இந்தப் பணியைச்
சொந்தப் பணியாகவே
செய்தவன் நீ!
ஏனென்றால் நீ
இருளின் எதிரி

மாணவர்க்கு நீ ஒரு
மகத்தான வழிகாட்டி
உன் வழியில் நடந்தவர்கள்
ஒன்றா? இரண்டா?

இலட்சியவாதி நீ
அதனால் எதிர்ப்பை
அலட்சியம் செய்தவன்!
இனமொழி உணர்வுதான்
உனது எதிரியானதா?

பொதுப்பணி எப்போதும்
உனது பொக்கிஷமே
இதனைப் பாதுகாக்க
நீ நடத்திய போராட்டம் தான்
உனது இலட்சிய வாழ்க்கை

உன்னால் தான்
தமிழர் ஆசிரியர் தலைமை
உயர்ந்து நின்றது
பணி செய்வதற்காகவே
அதனைப்
பற்றி நின்றவன் நீ!
அணி நீ அதற்கு
அகிலம் அறியும்!

நீதிக்காக
நிமிர்ந்து நின்றவன் நீ
இந்த நிமிர்வு
சில நெஞ்சங்களுக்கு
நெருப்பானது
அதனால்
பகை
பக்கத்தில் வந்து நின்றது.

மற்றவர்களுக்காக
வாழ்பவன் தான் மனிதன்
அந்த மனிதன் நீ
ஆயிரம் முறை சொல்லலாம்

வணசிங்கா ஐயா
நீ உண்மையிலேயே
வணக்கத்திற்குரியவர்

வாகரை வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka

# காற்றில் கலந்து வரும்...

## இலங்கை வானொலி தேசிய சேவையில் கத்தோலிக்க நிகழ்ச்சிகள் – தமிழ்

## ஏப்ரல் – 2005

**கத்தோலிக்க நற்சிந்தனைகள் – நேரம் காலை 5.50 மணி.**

நாள்: 2,3,4,5 - அருட்தந்தை K. நிதிதாசன்

6,7,8 - திருமதி. புவனேஸ்வரி அகஸ்டின்

16,17,18,19 - அருள்தந்தை N.C. அருள்வரதன்

20,21,22 - செல்வி மெற்றில்டா இராஜேந்திரம்

**சிறுவர் உலகம் – நேரம் மாலை 06.30 மணி**

நாள்: 12 - 'புனிதர்களை அறிவோம்'. வினாவிடைப் போட்டி நிகழ்ச்சி

26- - சஞ்சிகை நிகழ்ச்சி

**புதிய உலகம் – நேரம் மாலை 6.30 மணி**

நாள்: 10 - 'நீடு துயில் கொண்ட அமைதிப்புறா' சித்திரம், போட்டி, செய்திகள்.

24 - உரை, நாடகம்

---

நிகழ்ச்சித் தொகுப்பு : *மலர்வேந்தன்*

தொகுப்பு : சமூகத்தொடர்பு நிலையம்
அ.பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org